பழைமைக்கும் பாசீசத்துக்குமே பகைவர் நாம்

Phone No. 4502 — Regd. No. M. 5458

விலை அணா ஒன்று — [இலங்கை [illegible] சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1] சென்னை (12—12—49) ❋ வெளியீடு (13—12—49) [இதழ் 114

ஆலம் விழுதேயன்றி வாழைக்கன்றல்ல தி. மு. கழகம்

வீடு ஜப்தியாயிற்று; வேண்டியன கொண்டு வெளியேறினோம்

அடிப்படைப் போராட்டமல்ல; அரசியலாளர்க்கு எச்சரிக்கை

குடந்தையில் பொதுச்செயலாளர் அண்ணாத்துரை

'திராவிட முன்னேற்றக் கழகம் போட்டி ஸ்தாபனம் அல்ல அது பழைமைக்கும் பாசீசத்துக்குந்தான் பகைமை ஸ்தாபனமே தவிர திராவிடர் கழகத்துக்கல்ல. தலைவர் பெரியாரவர்களின் திருமணத்தை ஆதரித்திருந்தால் எனக்கு இந்த அலைச்சல் கூட இருந்திருக்காது" என்று கடந்த 4-ந் தேதியன்று மாலை குடந்தை தி. மு. க. தொடக்க விழாவில் சொற்பொழிவாற்றிய தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை குறிப்பிட்டார்.

தோழர் அண்ணாத்துரை மேலுங்கூறியதாவது:

'எனக்கும் தலைவருக்கும் இடையேயுள்ள மன வேற்றுமையைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளலாமென்று சர்க்கார் நினைத்தால், அது தவறு; திராவிடர் கழகத்தின் மீது சர்க்கார் அடக்கு முறையை வீசினால், அதை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பாகக்கண்டித்தேதீரும். இந்த போராட்டத்தை அடிப்படைக் கொள்கைப் போராட்டம் என்று எவரும் நினைக்கக் கூடாது.'

[4—12—49 ஞாயிறு மாலை குடந்தை தி. மு. க. தொடக்க விழாவில், தோழர் சி என். அண்ணாத்துரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு]

அன்புள்ள தலைவரவர்களே! அருமைத் தோழர்களே!

நான் அரசியல் சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றியும், திராவிடர் கழக, திராவிட முன்னேற்ற கழகப் பிரச்சினைகளைப் பற்றியும் விரிவாகப் பேசுவேன் என்று தலைவர் பணித்தார். இவைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், இதுவரைக்கும் பேசாத ஒரு புது விஷயத்தைப் பற்றிப் பேச ஆசைப்படுகிறேன்.

அதாவது என்னைப் பற்றி. நான் ஒரு சந்தேகத்துக்குரிய பேர்வழி. காங்கிரஸ் நண்பர்களால், கம்யூனிஸ்டு தோழர்களால், சர்க்காரால், கடைசியாக என் சொந்தக் கட்சியான திராவிடர் கழகத்தாரால் சந்தேகப்பட்ட பேர்வழி. இத்தனைபேருடைய சந்தேகத்துக்கும் உரிய நான், சராசரி அளவுக்கு சற்று 'மட்டமானவன்!'

1935-ம் ஆண்டு சென்னை பச்சையப்பன கல்லூரியில் பி. ஏ. (ஆனர்ஸ்) தேர்வு எழுதி விட்டபிறகு, தேர்வின் முடிவு தெரிவதற்கு முன்னாலேயே, பொதுவாழ்விலீடுபட்டேன். அன்றிலிருந்து இன்று வரை, ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாகப் பொது வாழ்வில் இருந்துவருகிறேன். நான் பி. ஏ. (ஆனர்ஸ்) தேர்வு எழுதிய உடனேயே திருப்பூரில் நடந்த வாலிபர் மாநாட்டுக்குப் பேச அழைக்கப்பட்டேன். என்னை அழைத்த நண்பர் பெயர் இன்னும் என் நினைவிலிருக்கிறது. திருப்பூருக்கருகிலுள்ள காங்கேயம் என்ற ஊரைச் சார்ந்த நடேசன் என்னை அழைத்தார்.

அந்த மாநாட்டில்தான் பெரியாரை முதன் முதலில் பார்த்தேன். அதற்கு முன்னுள் ஈரோட்டிலிருந்து வெளிவந்த "குடி அரசு"ப் பத்திரிகை, அதை எதிர்த்து எழுதிவந்த "தேச பந்து", "சுதேசமித்திரன்" பத்திரிகைகளைப் படித்திருக்கிறேன். ஆனால் பெரியாரை நேரில் பார்த்தது, திருப்பூர் மாநாட்டில்தான் எனக்கு இன்னுங்கூட அந்தக் காட்சி கண்முன்னே நிற்கிறது. வெண்தாடியுள்ள பெரியார், அவரருகே பொன்னம்பலம், கண்ணப்பர், இவர்களுக்குப் பின்னால் முத்தையா முதலியார்!

காலம் காட்டிவிடும் உண்மையை

அதே நேரத்தில் ரஞ்சியில் டாக்டர் அன்சாரி தலைமையில் காங்கிரஸ் மாநாடு ஒன்று நடந்துகொண்டிருந்தது. காங்கிரஸ்காரர்கள் அதுவரையில் கைக்கொண்டிருந்த சட்ட மறுப்பைக் கைவிட்டுவிட்டு, சட்டசபை நுழைவை ஏற்றுக்கொள்ளவே அந்த மாநாடு கூட்டப்பட்டது. திருப்பூர் மாநாட்டில், அத்தீர்மானத்தைக் கண்டித்து நான் பேசினேன். மாநாட்டுநடவடிக்கைகள் முடிந்த பிறகு, பெரியார் என்னை அழைத்து, "வேலைக்கு வருகிறாயா?" அல்லது "பொது வாழ்வில் ஈடுபடப்போகிறாயா?" என்று கேட்டார். நான் பொது வாழ்வில் ஈடுபடப்போவதாகக் கூறினேன். அன்றிலிருந்து இன்று வரை, பொது வாழ்வில்தான் இருக்கிறேன். மக்கள் விரும்பும் வரை, பொது வாழ்வில் தான் இருப்பேன். எனக்கும் பெரியாருக்கும் அன்று ஏற்பட்ட தொடர்பு இத்தனை நாட்களாக இருந்து வந்தது. அந்தத் தொடர்புதான் அரசியலில் எத்தனையோ சபலங்கள் புயல்கள், தூதுக்கள் ஏற்பட்ட பிறகுங்கூட, என்னை அதே இலட்சியத்திலேயே வைத்திருக்கிறது எப்போதாவது விலகிப்பு தோன்றினால் துறவறம் பூண்டிருப்பேனே தவிர, கட்சி மாறியதில்லை அப்படிப்பட்ட நான்தான் சந்தேகத்துக்குரிய பேர்வழி!

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

தெற்கே ஆஸ்திரேலியா முதல் மேற்கே இந்தியா வரையில் கம்யூனிஸ்டுகள் சங்கிலித் தொடர்பு

(0)

மேற்கு வல்லரசுகள் ஆதிக்கத்தை 'ஒடு கை' பார்த்தே தீருவர்!

பிரிட்டன் 'எக்னமிஸ்டு' கருத்துரை

லண்டன், டிச. 11—

"கம்யூனிஸ்டுகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்புவது என்று திட்டம் போட்டு வேலை செய்கிறார்கள். ரஷ்யா, அமெரிக்கா கோஷ்டிகளுடன் சேராமல் இந்தியாவைத் தனித்து வைக்கவே பண்டித நேரு விரும்பினால் இந்தக் கம்யூனிஸ்டு ஆபத்து பரவுவதைக் கண்டு இந்தியா அலட்சியமாக இருந்துவிட முடியாது என்று 'எக்னமிஸ்டு' பத்திரிகை எழுதியிருக்கிறது.

அப்பத்திரிகை மேலும் எழுதியிருப்பதாவது ;—

சமீபத்தில் நடைபெற்ற பீகிங் மாநாட்டில் கீழ்க்கோடி காமின்பாரம் ஒன்றே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தென்கிழக்கு ஆசியாவின் எல்லா நாடுகளின் பேரிலும் கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டம் இருப்பதாகத் தெரிகிறது.

தெற்கில் ஆஸ்திரேலியா வரையிலும், மேற்கில் இந்தியா வரையிலும் கம்யூனிஸ்டுகள் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தெந்தநாடுகளில் மேற்கு வல்லரசுகள் யுனைடெட் ஸ்டேட்ஸ் இவைகளின் ஆதிக்கமும், செல்வாக்கும் இறக்கிறதோ, அந்த நாடுகளில் கம்யூனிஸ்டுகள் முதலில் தங்கள் கை வரிசையைக் காட்டுவார்கள். இந்தியாவையும் அவர்கள் விட்டுவைக்கமாட்டார்கள் ஆகவே இந்தக் கம்யூனிஸ்டு அபாயம் பரவுவதைக் கண்டு இந்தியா 'ஏனோ தானோ" என்றிருக்க முடியாது.

பர்மா, திபேத் இவைகள் மீது சீனாவுக்கு உரிமை உண்டு என்பதை கம்யூனிஸ்டுகள் விட்டுவிட மாட்டார்கள். ஆகவே இந்தியா இந்த விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுக்க வழிகாட்டியே யாக வேண்டும்.

உலக பாங்கி கடன் தொகை

உலக பாங்கியிலிருந்து வாங்கும் ஒரு கோடி டாலர் கடன்தொகை மூலம் 375 டிராக்டர்கள் வாங்கப் படுமென்று விவசாய மந்திரி தோழர் ஜெயராம்தாஸ் தௌலத்ராம் மத்திய சட்டசபையில் குறிப்பிட்டார். 180 டிராக்டர்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுவிட்டன வென்றும் அவை பெப்ரவரியில் டெல்லி வந்து சேர்ந்துவிடுமென்றும், எஞ்சிய 195-க்கும் விரைவில் ஆர்டர் தரப்படுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

யூதர்கள் படை திரட்டுகின்றனர்

இஸ்ரேல் எல்லைகள் பலப்படுத்தப்படுகின்றனவாம்

அம்மான், டிச. 11—

யூதர்கள் வசமுள்ள பாலஸ்தீன மெங்கும் ராணுவ முஸ்தீபு மும்முரமாக நடைபெறுகிறதென்று, இஸ்ரேலிலிருந்து இங்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

யூதர்கள் படைதிரட்டுகின்றனர், 15 வயது ஆனவர்கள் கூட படையில் சேர்க்கப்படுகிறார்கள் பெண்களும் ஏராளமாக இராணுவத்தில்சேர்க்கப் பட்டுவருகின்றனர்.

இஸ்ரேல் எல்லைகள் பலப்படுத்தப்படுவதாகவும் அச்செய்திகள் கூறுகின்றன.

அரபுகள் கூட்டுப்பாதுகாப்புத் திட்டம் கண்டு, தாங்கள் முன்ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது என்று, டெய்லி அவீவ் அதிகாரிகள் யுனைடெட் ஸ்டேட்சுக்கு உத்யோக பூர்வமாக அறிவித்திருக்கின்றனர்

பண வீக்கத்தைக் குறைக்க கம்யூனிஸ்டு சீனு நடவடிக்கை

:0:

மக்களிடமிருந்து கடன் தொகை எழுப்பத் திட்டம்

ஹாங்காங், டிச. 9—

பரந்த இடங்களைக் கைப்பற்றிய சீனக் கம்யூனிஸ்டுகள், நிர்வாகத்தை நடத்தப்பணம் பெறுவதற்காக, வெற்றிக் கடன்பத்திரங்களை வெளியிடவிருக்கிறார்கள். இக்கடன் பத்திரங்களைவாங்குபவர்கள் பின்னர் பணத்திற்குப் பதிலாக அரிசி, மாவு, துணி, நிலக்கரி முதலியவைகளைப் பெறலாமாம்.

இக்கடன் திட்டத்தை விளக்கி, நிதி மந்திரி போயிபோ கூறுவதாவது: இந்த வெற்றிக்கடன்பத்திரங்களில், ஒவ்வொன்றும் 20 கோடி யூனிட்டுகள் கொண்டது ஒவ்வொரு யூனிட்டுகளுக்கும் 6 அவுன்ஸ் அரிசி, இரண்டு அவுன்ஸ் மாவு, 4 அடி மெல்லிய துணி, 18 அவுன்ஸ் நிலக்கரி கொண்டது. இந்தப் பத்திரங்களுக்கு 5 சதவிகிதம் வட்டி கொடுக்கப்படும்.

இக்கடன் திட்டம்பற்றி கம்யூனிஸ்டு சீனு செய்தி ஸ்தாபனம் கூறுவதாவது:—

பணவீக்கத்தைக் குறைக்கவே இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. போரில் ஏற்பட்ட செலவுக் காரணமாக, விலைவாசிகள் ஏறுவதை இப்பொழுது தடுப்பது சாத்தியமில்லை. இராணுவச் செலவும் ஏகமாக அதிகரித்திருக்கிறது. புதியதாக கைப்பற்றப்பட்ட இடங்களில், இன்னும் வரி வசூல் செய்ய முடியவில்லை. 1950-ல் போர் முடியும் என்று சொல்வதற்கில்லை. இவ்வாண்டை விட அடுத்த ஆண்டு செலவு அதிகமாகவே இருக்கலாம்.

தென்மேற்கு சீனு, திபேத், போர்மோஸா, ஹைனந்தீவு முதலியவைகளை விடுவிக்கும் வேலைக்குப் பணம் நிறைய செலவாகும். இந்தச் செலவுகளை எல்லாம் சரிகட்டவே, கடன் திட்டம் எழுப்பப்பட்டிருக்கிறது. — ரூனேப்பு

மாலை மணி

சென்னை 12—12—49 திங்கட்கிழமை

அதிகார ஆசை

மக்களின் ஒப்புதல் பெற்றோ பெறாமலோ அதிகார பீடம் ஏறியவர்கள், அப்பீடத்தை விட்டு இறங்குவதென்றால், அது அவ்வளவு எளிதான ஒரு செயலாக இருப்பதில்லை. அதிகாரத்தின் சுவை நுகர்ச்சி அவர்களை எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்க முடியுமோ அந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிடுகிறது! "அதிகார ஆசை ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்பதற்குப் பலர் இரையாகி வருகின்றனர் என்பதை, வரலாறு அவ்வப்போது எடுத்துக் காட்டிவருகின்றது.

மக்களின் சக்தி ஒன்று திரண்டு எழுந்து, அதிகார பீடத்தினின்றும், அத்தகைய "அதிகார சுவை" பருகுவோரை வலுவில் நீக்க முயலும்போது, சுவை பருகுவதையே குறிக்கோளாகக் கொண்ட ஆளவந்தார்கள், தங்கள் முழுமுயற்சியையும்—ஏன், தங்கள் கடைசி முயற்சியையும் பயன்படுத்தப் பார்ப்பார்கள். பீடத்தினின்றும் சரிந்து விழும்போது அதிகார ஆசையை, நாவசைப்பின் மூலம் காட்டிக்கொண்டே இருப்பார்கள். அத்தகையோரையும் வரலாறு படம் பிடித்துக் காட்டத் தவறுவதில்லை. அதிகார ஆசையால் ஆட்டிப்படைக்கப்படும் ஆளவந்தார் ஒருவரை, இன்றைய வரலாறு, உலகினோர்க்கு இது நாளில் அறிமுகப்படுத்தி வருகிறது. அவர்தான் சீனாவின் சியாங்!

சியாங், சீனாவை உலகோர்க்கு அறிமுகப் படுத்திக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது! இப்பொழுது சீனா, சியாங்கை அறிமுகப்படுத்துகிறது!

சீனாவில்! வெற்றி-தோல்வி யார் பக்கம் என்பது 'மதில் மேல் பூனை' மாதிரியாக இப்பொழுதில்லை. சீனா முழுவதும் சிவப்பேறி விட்டது என்பது, திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது. என்றாலும் தனக்கொரு சீனா உண்டு என்ற அளவில், இல்லாத 'சீன அரசாங்கத்தின்' தலைவராகவும், ஜெனரலாகவும் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்புகிறார் சியாங். அதிகார ஆசை, சிவப்பேறிய சீனாவைக் காணாதவாறு அவரது கண்ணை மறைக்கிறது—மக்களின் ஒருமித்த குரலைக் கேட்காதவாறு அவரது காதை அடைக்கிறது—தனைநிலை எப்படி என்பதை உணர்ந்து கொள்ளவொட்டாமல் கருத்தையும் இருட்டாக்குகிறது! என்ன செய்வார்! தோல்வியின் சுமைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தாங்கித் தள்ளாடிக் கொண்டிருக்கும் சீன தேசீய அரசாங்கத்தைச் சீனாவை விட்டே வெளியேற்றி பார்மோசாவில் நிலைநாட்ட திட்டமிட்டுள்ளார், சீனாவின் முன்னாள் 'தீரர்' சியாங்' இதுவும் எத்துணை நாட்களுக்கு நிலைக்கும், அவருக்கே தெரியாது!

தன் அரசாங்கத்தை நான்கு தலைநகருக்குநகர்த்திச்சென்று, இப்பொழுது பார்மோசாவிலுள்ள டெய்பேய் என்ற ஐந்தாவது தலைநகருக்கு எடுத்துக்கொண்டு ஓடுகிறார்! அவர் எடுத்துச்செல்லும் அரசாங்கத்துக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஏதும் இல்லை! அதிகார ஆசை அதையெல்லாம்செய்து பார்க்கச் சொல்லுகிறது.

களப்போர் நின்று விட்டது. இனி வளப்பெருக்கந்தான் எங்கள் வேலை என்று மா-சே-துங் முழக்கமிடத் தொடங்கி விட்டார். பிணநாற்றம் வீசிய பலபகுதிகளில் இப்பொழுது, நறுமணம் கமழத் தொடங்கி விட்டது என்று மனப்பூரிப்படைகின்றனர் சீனமக்கள். செஞ்சீனாவை அதிகார பூர்வமான நாடாக ஏற்றுக்கொள்வதென்றமுடிவுக்குஐயப்பாட்டில் இது வரையில் உழன்று வந்த இந்தியா போன்ற நாடுகள் வந்துவிட்டன. அமெரிக்க-ஆங்கிலேய வல்லரசுகள் ஒத்துக்கொள்வதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லையே என்ற நிலைக்குத் திகைப்புடன் வந்து கொண்டிருக்கின்றன. கம்யூனிஸ்டுக் கொள்கையுடைய ஏனைய நாடுகள் முன்னேற செஞ்சீனாவுக்கு ஆதரவு தந்து விட்டன. இந்த நிலையிலும், நிலைமையை முற்றும் உணர மறுத்து, சியாங் சீனாவை இன்னமும் போர்க்களமாக்கிக் கொண்டிருக்கவே நினைக்கிறாரென்றால், அவரது அதிகார ஆசை எந்த அளவுக்குத் தலை தூக்கி இருக்கிறது!

சியாங், அதிகாரம்செலுத்துவதை மக்கள் விரும்பவில்லை! ஆனால் மக்கள்மீது தொடர்ந்து அதிகாரம் செலுத்த சியாங் விரும்புகிறார்! இந்த ஆசையை எத்துணை காலத்திற்கு நீட்டிக் கொண்டிருக்கப் போகிறார்? எத்துணை காலத்திற்குத்தான் முடியும்!

ஆக்வே, சீனநாட்டு மக்களுக்கு நன்மை தரும் வழியில் அந்நாட்டின் முன்னாள் ஆட்சித் தலைவர் சியேங் கே ஷேக், ஏதாவதொரு இறுதிச் செயல் ஒன்று இருக்கிறதென்றால், அது, முழு ஓய்வுபெற்றுக் கொண்டு, முன்பே திட்டமிட்டிருப்பதற்கொப்ப, அமெரிக்காவிற்குச்சென்று இனிய வாழ்வு நடத்துவதுதான்! இதைச்செய்ய அவர் முன் வந்தால், அவருக்கும் நல்லது; சீனநாட்டு மக்களுக்கும் நல்லது; 'அதிகார ஆசை' என்ற சொற்றொடருக்கு இருக்கும் கெட்டபெயரும் வளர்ந்து கொண்டே போகாமல் இருக்கும்! செய்ய முன்வருவாரா? வரவேண்டும்!

ஜெருசலம் நிர்வாகம்

ஐ. நா. ஆதிக்கத்தின் கீழ்வரும்

ஜெருசலத்தை நிரந்தர சர்வதேச ஆட்சியின் கீழ் கொண்டுவந்து விடுவதற்குச் சாதகமாக ஐ. நா. பொது சபை டிச. 9-ந் தேதி யன்று வோட்டளித்து, தர்மகர்த்தா கவுன்சில் முடிவு செய்யும் ஏதோ ஒரு அதிகாரத்தின் கீழ், மேற்படி சர்வதேச நிர்வாகம் ஏற்பட வேண்டுமென்றும் சபை முடிவு செய்தது.

'ஜெருசலம் நகர்' என்பதின் கீழ் இப்போதைய ஜெருசலம் முனிசிபாலிடியும் சுற்றுவட்ட கிராமங்களும், பட்டணங்களும் அடங்குமெனவும் வரையறுக்கப் பட்டது. ஜெருசலத்துக்கான நிர்வாக சட்டமுறையை அடுத்த ஐந்து மாதத்துக்குள் முடித்துத் தருமாறு தர்மகர்த்தா கவுன்சிலைக் கேட்டுக்கொள்வதென்றும்பொதுச் சபை தீர்மானித்தது.

இஸ்ரேல் அயல்நாட்டு மந்திரி தோழர் ஷாரெட் மட்டும் இஸ்ரேலிலிருந்து ஜெருசலத்தைப் பிரித்தல் கூடாதென தீவிரமாய் ஆட்சேபித்தார்.

ஐ நா. வுக்கே கேடுகாலம்!

நியூயார்க், டிச. 11—

ஜெருசலத்தின் மீது சர்வதேச கட்டுப்பாடு ஏற்படுவதை எதிர்த்தே அமெரிக்கப் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

இதுபற்றி நியூயார்க் டைம்ஸ் எழுதுகையில் இதனால் ஜெருசலம் பிரச்னை தீர்ந்துவிடப் போவதில்லை என்றும் இந்த வெற்றி; மத விஷயம் சம்பந்தமான வெற்றியே என்று ஐ. நா.விலேயே கருதப்படுகிறதென்றும் எழுதியிருக்கிறது.

முடிவு தெரிந்தவுடன் இஸ்ரேல் அயல்நாட்டு மந்திரி மோஷே ஷேரட் "ஐ. நா.வுக்கே கேடு காலம்" என்று கூறினாராம்.

அரசியல் கமிட்டியில் எதிர்த்த நிலையை அரபுகள் சமநிலைமை வகிக்கும்படி செய்துவிட்டார்கள். ஜெருசலம் சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டும் என்ற பிரேரணை அரசியல் கமிட்டியில் வந்தபோது வோட்டில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்த இந்தியா, பாகிஸ்தான், ஹெய்டி, பிலிப்பைன்ஸ் எதியோபியா, வெனிசுலா ஆகியனவை களைத் தீர்மானத்திற்கு சாதகமாக வோட்டளிக்கும்படி செய்வதில் அரபுகள் வெற்றிபெற்றுவிட்டார்கள்.

டிட்டோவின் ரகசியப் போலீஸ் படை

டிரீஸ்டே, டிச. 11—

78000 'இன்ஸ்பெக்டர்கள்' கொண்ட ஒருரகசிய போலீஸ் படையை மார்ஷல் டிட்டோ ஏற்படுத்தியிருப்பதாகவும் இவர்கள் ஏற்கனவே பதுக்கப் பட்ட உணவு தானியங்களைக் கண்டு பிடித்து வருகின்றனர் என்று யூகோஸ்லாவியசெய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது

இரும்பு, எஃகு விலை குறைகிறது

இரும்பு எஃகு ஆலைகளின் பலதிறப்பட்ட ரகங்களின் விலைகளையும் டன்னொன்றுக்கு ரூ. 30 வீதம் குறைப்பதென இந்திய சர்க்கார் முடிவுசெய்துள்ளனர். இன்றியமையாபொருள்களின் விலையைக் குறைப்பதென்ற சர்க்காரின்கொள்கையை யொட்டியே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

கம்யூனிஸ்டு சர்க்காருக்கு பிரிட்டன் அங்கீகாரம்

லண்டன், டிச. 11—

சீனகம்யூனிஸ்டு சர்க்காரை பிரிட்டன் இருஸ்து மஸ்ஸிக்கு முன்பே அங்கீகரித்து விடும் என்று எதிர்பார்க்கலாம், என்று மாஞ்செஸ்டர் கார்டியன் அரசியல் நிருபர் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது: காமன் வெல்த் நாடுகளும் நடத்தியுள்ள ஆலோசனைகளின் விளைவாக ஒரு முடிவுக்கு வர தயாராகவே இருக்கின்றன. ஆஸ்திரேலியா மட்டும் பொதுத் தேர்தலுக்குப்பின் இதை வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்ததாகத் தெரிகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸ் காமன்வெல்த் நாடுகள் முடிவுடன் தன் முடிவை தெரிவிக்கும் என்று தோன்றவில்லை. அநேகமாக பிரான்ஸும் தன் அங்கீகாரத்தை அறிவித்து விடலாம்.

கடமையைச் செய்யத் தவறியவர்க்கு கல்தா!

ஜெக் பத்திரிகாசிரியருக்குச் சீட்டு

பிரேக், டிச. 11—

ஜெக் பிரபல கம்யூனிஸ்டு பத்திரிகையின் ஆசிரியரும் கட்சி பிரமுகருமானவிலெமீ சோவிதனது 'போல்ஷிவிக் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை என்பதற்காக ஆசிரியர் பதவியிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். இவரும் இவரைப்போலவே டிஸ்மிஸ் செய்யப்பட்ட இதரர்களும் டிட்டோவின் ஆதரவாளர்களாக இருப்பார்களோ என்ற சந்தேகம் பிரோவினுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

அறிவுக் கதிர்!

உலக மக்களுக்குப் போதுமான உணவும், ஆடையும், வீடும் போதுமானதற்கு மேலாகவே உலகில் உண்டாக்கப்படுகிறது என பல மெய்ஞ்ஞானிகளும் கூறுகின்றனர்கள். அப்படி இருந்தும், போதாமையும், இல்லாமையும் மக்களைப் பண்டைக்காலமுதல்வாட்டிவருகின்றன. இந்த அதிகம் எந்தமக்களுக்கு உபயோகிக்கப்படுகின்றது? மக்கள் உழைப்பால் உண்டான இந்த "அதிகம்" மக்கள் வயிற்றுக்கு உதவாமல், உலக ஆடம்பரங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதால், பண்டைக் காலமுதல் நாளதுவரை உலகம் படும் துயரத்திற்கு, இந்தத் துர்விநியோகம் முதற் காரணமாயிருக்கிறது. இந்த 'அதிகம்' கோவில்களுக்கும், குளங்களுக்கும், மூடபக்தியை வளர்க்க உபயோகப்பட்டு வருகின்றது. மனிதனுடைய வீண் பெருமையை வளர்க்கும் நவரத்தினங்களுக்கும், நகைகளுக்கும் உபயோகப்பட்டு வருகின்றது. கல்லுக்கும், செம்புக்கும் செய்யும் நிவேதனங்களால் வீணாயும் மூடநம்பிக்கையை வளர்க்க உதவுகின்றது. மனிதனை மனிதன் கொல்லும் யுத்தங்களுக்காகச் செலவிடப்படுகிறது. இந்த "அதிக"த்தைக்கொண்டு டம்பத்தை வளர்க்கும் வசதிகளுக்கு செலவிடப்படுகின்றது. இந்த மிகுதியை தானத்திலும், தருமத்திலும செலவிட்டு மக்களைச்சோம்பேறியாக்கும் காரியம் செய்யப்படுகிறது. சத்திரங்களும் சாவடிகளும், அன்ன தானங்களும், சொர்ணதானங்களும், பிராமணர்கட்கும், மடாதிபதிகட்கும், வழக்கிற்கும், வில்லங்கத்திற்கும், உதவுவது இந்த மிகுதியன்றோ!

— சிந்தனைச் சிற்பி
ம. சிங்காரவேலர்

ஏக கட்சி சர்வாதிகார ஆட்சியில் ஈதென்ன அதிசயம்!

—(o)—

பொதுமக்களின் வரிப்பணம்கொண்டு நேர்மைக்கு 'வெடி' வைக்கின்றனர்!

அரசியலில் கவர்னர்கள்கலந்து கொள்ளாது, மாகாண நிர்வாகத்தில் பொது நோக்குடன்—எவ்வித கட்சி சார்புமின்றி—இருந்து வரல் வேண்டுமென்று ஆண்டாண்டு காலமாக இருந்து வந்திருக்கும் பழக்கத்தை மீறி, மேற்கு வங்க கவர்னர் டாக்டர் கைலாசநாத் கட்ஜூ டிசம்பர் 9-ந் தேதியன்று ஐ.மா. மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து, சொற்பொழிவாற்றினாரென்று செய்திக்குறிப்பொன்று கூறுகிறது. அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் புருஷோத்தமதாஸ் தாண்டன் பேசுகையில், சட்டசபைத் தலைவர்கள் அரசியலில் கலந்து கொள்ளுதல் கூடாதென்ற தடையைத் தான் மீறிவிட்டதாகவும் கூறி பெருமைப்பட்டாராம்.

காங்கிரசாரின் ஏகபோக ஆதிக்கப் போக்கையுணர்ந்தோர்க்கு இதெல்லாம் ஆச்சரியமூட்டக்கூடியவையல்ல. பொதுமக்களின் வரிப்பணத்தைக் கொண்டு நடக்கும் சர்க்கார் செலவில், காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு உறுப்பினர் சேர்ப்பதும், சென்னைக்கு தேவைதம் அவ்ருடைய முயற்சியாயிருந்து வருகையில் பொதுமக்கள் பணத்தை சம்பளமாகப் பெற்று வரும் இவர்தான் காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்வதில் தானா குடிமுழுகிப் போகிறது. காங்கிரஸ் கட்சி வேறு, பொதுமக்கள் மன்றம் வேறு என்ற தன்மையில் எதுதான் நடக்கிறது இந்நாட்டில் என்று கேட்கின்றோம். சரியாகவே, தவறாகவோ தங்கள் கையில் வந்து திக்கிவிட்ட அதிகாரத்தைக் கொண்டு சர்வாதிகார முறையில் தானே ஆட்சி நடத்தி வருகின்றனர்! அனைத்திந்திய வானொலி அவர்கள் பிரசாரத்துக்கு, பத்திரிகைகள் அனைத்தும் அவர்களைத் துதிபாடுதற்கு! எதிர்த்து பிரசாரம்செய்யும்பத்திரிகைகள்-ஸ்தாபனங்கள் அனைத்திற்கும் 144-ம்வாய்ப்பூட்டும்.

ஏக கட்சி சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாட்டில், அயோக்கியும், குண்டாந்தடியும் தலைகொண்டு சபாலகையுமல்லெனது பீடமேறிவிடும் நாட்டில் நீதியும் நேர்மையும்கொலுவோக்கும் நிலைபெறுதல் எவ்வனம்?

நல்லோர் உழைப்பை நாடு பெற நிறுவப்பெற்றதே நம் கழகம்

வேறு வழியின்றி வேதனையோடுதான் வீட்டைவிட்டு வெளியேறினேம்!

கொண்ட கொள்கை-கோட்பாடுகள் குலைவது கண்டு மனம் சகியோம்!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெரியாரோடு நான் இருந்த போது எனக்கும், பெரியாருக்கும், எங்களைச் சார்ந்த நண்பர்களுக்கும் தேசத் துரோகி, மதத் துரோகி, பிராமண துரோகி என்ற பட்டங்களை நாடும், மக்களும், எங்களுக்களித்தது. இப்போது, குரு துரோகி என்ற நான்காவது பட்டம் எனக்களிக்கப்பட்டிருக்கிறது அந்த மூன்றும் எப்படித் தவறு என்று நாடு உணர்ந்து கொண்டதோ, அப்படியே குரு துரோகி என்ற பட்டமும் தானுகவே நீங்கிவிடும், பொய்யாக்கப்படும். காலம் மிகமிகக் கண்டிப்பான எஜமானன். காலம் எந்த உண்மையையுங் காட்டிவிடும். எத்தனை பழிச் சொற்கள் என்மேல் சுமத்தப்பட்டாலும், காலம் இத்தனையையும் தூக்கி எறிந்துவிடும்.

ஆலம் விழுதே தவிர, வாழைக்கன்றல்ல நம் கழகம்

திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்த பிறகு, யார் யார் சுயமரியாதைக் கோட்பாட்டைக் கொண்டவர்களோ, அவர்களுக்கெல்லாம் ஒருவித மனபயகம் ஏற்பட்டிருக்கிறது. பெரியாரும் அண்ணுவும் பிளவுபட்டால், நம் புனிதமான கோட்பாடுகள் எதிரிகளால் நாசமாக்கப்பட்டுவிடுமே என்ற மனக்குழப்பம் தோன்றியிருக்கிறது. அவர்களுக்குக் கூறுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகத்தின் கோட்பாடுகளைக் கொண்டே பணியாற்றும் என உறுதிகூறுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் 'ஆலம் விழுதே தவிர, வாழைக் கன்றல்ல'. ஆலமரத்தில் விழுது தோன்றினுல் அது அடிமரத்துக்கு வலிவு. ஆனல் வாழைக்கன்று தாய் வாழையை அழிக்கும்.

ஏன் வேறு பெயரில் இயங்கக் கூடாது என்று பலர் கேட்பார்கள். வேறு பெயரில் இயங்கினுல், இப்போதிருப்பதை விட இன்னும் சற்று சந்தேகம் அதிகமாகும். எனக்கும், என் நண்பர்களுக்கும் பெரியார் பணம், பொருந்தா மணம் என்று தெளிவாகத் தெரிந்தது. மாற்றுக்கட்சித் தோழர்கள் ஐயாண்டி செய்வார்களே என்று மருண்டோம். இதைத் தலைவரிடம் தெரிவித்தோம். அவர் தம் மணத்தைத் தவிர்க்க ஒப்பவில்லை. அதற்கு பிறகே வெளி வந்தோம். அதே திட்டங்கள், கோட்பாடு, கொள்கை இத்தனையிலும் எங்களுக்குப் பற்று, நம்பிக்கை இருக்கிறது. அவை வைகளை நிறைவேற்ற அத்தத் தலைவர் தலைமையிலிருந்து பணியாற்ற முடியாது என்று தெளிவாகத் தெரிந்தது ஆகையால்தான் முற்றும் வேறு பெயரில் இயங்க ஆசைப்படவில்லை.

இரண்டு பட்டிருப்பது இன்பமா தரும்!

எனக்கு முன்னல் பேசிய பெத்தாம்பாளையம் பழனிச்சாமி கூறியபடி பொதுப் பணியிலிருந்தே விலகிவிடுகிறேன் என்றேன். பொதுப் பணியிலிருந்தே விலகுகிறேன் என்றால் மாற்றுக் கட்சிக்குப் போவதோ அல்லது வேலைத் தேடப் போவதோ அல்ல எனக்கு இப்போது வயது 40-க்குமேல் ஆகிறது. இந்த நிலையில் வேலை தேடிப் போவதோ, வேலையில் இருந்து பணியாற்றுவதோ சற்று சங்கடமான விஷயம். வேறு கட்சிக்கு ஏன் போகவில்லை என்றுல், வேறு கட்சிகளில் நாங்கள் இதுவரையில் சொல்லி வந்த கொள்கைகள் கிடையாது அரசியலில் தனி நாடு, சமுதாயத்தில் சமத்துவம் சுயமரியாதை, பொருளாதாரத்தில் பொது உடைமை இந்த மூன்றும் சேர்ந்து எந்தக் கட்சியிலும் இல்லை ஆகையால், வேலை தேடப் போவதோ வேறு கட்சிக்குப் போவதா முடியாத காரியம்

மூன்றுவது பாதை திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவது திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவது ஊரை இரண்டாக்கிவிடும். அண்ணனும் தம்பியும் இரண்டுபட்டால் அது எவ்வளவு தூரம் வேதனைக்குரிய விஷயமாக இருக்கும்? இப்பொழுதே பார்க்கலாம். தோழர் சம்பத் திராவிட முன்னேற்றக் கழகம். ஆனல் அவர் தம்பி செல்வன் திராவிடர் கழகம். அவருடைய மகன் திராவிட முன்னேற்றக் கழகம். இரண்டு கழகங்களாக இருக்கும்போதே இப்படி இருந்தால் கைப்பற்றினுல் நிம்மதி இருக்குமா? இப்போது இந்த மேடையை பார்க்கிறேன் தோழர் முத்துதனபால் இல்லை, தோழர் பி ஆர். பொன்னுசாமி இல்லை சந்தேஷமாக இருக்கிறது இந்தக் காட்சி? அதேபோல நானே பெரியார் வந்தால், தோழர் கே. கே. நீலமேகம் இருக்கமாட்டார் வி சின்னத்தம்பி இருக்கமாட்டார் அவருக்குத்தான் சந்தோஷம் உண்டாகுமா? திராவிடர் கழகத்தை கைப்பற்றினுல் சாக்காட்டு குமுறை இல்லாமல் காங்கிரஸ்காரர்கள் கேலி இல்லாமல் நம் இயக்கத்திலே குழப்பம் ஏற்படும். ஆகையால் இந்த மூன்று வழிகளையும் கைவிட்டுவிட்டேன். நான் சார்ந்த பாதைதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

உழைப்பாளிகளை உலகு இழந்திருக்கும்!

பொதுவாழ்விலிருந்து நான் விலகினுல், இந்த சொன்னதைக் கொண்டு கலைத்துறையில் என்னுல் பணியாற்ற முடியும் இன்னும் சொல்லேன் இலாபத்தோடு, மதிப்போடு பணியாற்ற முடியும். நான் பொதுவாழ்வில் சலிப்படைந்து ஒய்ந்திருந்தபோதெல்லாம், கலைத் துறையில் பணியாற்றி இருக்கிறேன். என் நண்பர்கள்கூட "சினிமா உலகத்துக்குப் போனவன் திரும்பி வருவாரோ கிறான்?" என்று சந்தேகித்தார்கள். இன்னும் சொல்லுகிறேன், எனக்குப் பொதுவாழ்வில் ஒய்வு கிடைத்தால் கலைத்துறையில் பணியாற்றுவேன்.

நான் போகலாம். ஆனல் என் நண்பர்களோடு இழக்க வேண்டும். தோழர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், அன்பழகன், சம்பத், கருணநிதி, சீனிவாசன், சிற்றரசு, கலைசத்தம்பி, வள்ளிமுத்து, சித்தையன் ஆகிய பலபேருடைய உழைப்பையும் நாடு இழந்திருக்கும். யார் யார் திராவிடர் கழகத்திலிருந்து பணியாற்றினர்களோ, யார் யார் போர் வீரர்களாக இருந்தார்களோ, பேச்சில், எழுத்தில் உழைப்பில் நம் கொள்கையைப் பரப்பப் பாடுபட்டார்களோ அத்தனைபேரையும் நாடு இழந்திருக்கும். அத்தனைபேரும் திராவிடர் கழகத்திலிருந்து பணியாற்ற முடியாது என்று தெரிவித்து விட்டனர். வேறு கட்சிக்கும் அவர்களால் போகமுடியாது இதனுல்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பிப்பதைவிட வேறு வழியே யில்லாமல் போய்விட்டது வீடு ஐ தியாகும்போது வீட்டைத்தான் விட்டுவிட்டு வருவோமே தவிர, அதிலுள்ள நம் தந்தையின் ஓவியம், தாயின் படம், நாம் உயிருக்கு உயிராய் நேசித்த நூல்கள் ஆகியவைகளை எல்லாம் எடுத்துக் கொண்டுதானே வருவோம். அதேபோலத்தான் கட்சியை விட்டு வெளியேறி புதுக்கட்சி தொடங்கியபோது, அதிலுள்ள கொள்கைகளையும், கோட்பாடுகளையும் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம்.

அங்கில்லாதது இங்கு?

முன்பெல்லாம் யார் யார் என் வரவை ஆர்வத்தோடு எதிர்பார்த்தார்களோ, அவர்களில் சிலருக்கு இப்போது ஆத்திரம் ஏற்பட்டிருக்கும். முன்பெல்லாம் யார் யார் மாலையுங் கையுமாக இரயில்வே ஸ்டேஷனில் எனக்காகக் காத்திருந்தார்களோ, அவர்களில் சிலர் இப்போது வெறுத்திருப்பார்கள் ஏன் அவர்களுக்கு மனக்கஷ்டம்?

திராவிடர் கழகத்தில் இருந்தபோது எனக்கில்லாத செல்வாக்கு, இங்கு என்ன புதிதாக ஏற்பட்டிருக்கிறது? எதைவிட மேன்மை என்ன அடைந்திருக்கிறேன். பெரியார் என்று எழுதினுல் அதற்கு நேரே அண்ணு என்று சுவரில் எழுதியிருக்கிறார்கள் அவரைத் தலைவர் என்றால். என்னைத் தளபதி என்று அழைத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனுல் ஜஸ்டிஸ் கட்சிக்கு, திராவிடர் கழகத்துக்கு திருவாரூர் மாகாணமாநாட்டிலிருந்து இப்போது நடந்த ஈரோடு மாநாடுவரை, பதினைந்து வருடங்களாக நான்தான் செயலாளர். இன்னமும் அந்த ஸ்தானம் பூர்த்தி செய்யப்படாமலே வைக்கப்பட்டிருக்கிறது

இந்தப் பிரிவால் நாங்கள் பட்ட வேதனை, சிந்திய கண்ணீர் உங்களுக்கென்ன தெரியப் போகிறது? தந்தையை மகன் பிரிகிறுன் என்பதுதான் அந்த வீதியிலிருப்பவர்களுக்குத் தெரியுமே தவிர, பிரியும் மகனின் உள்ளத்தில் தேன்றித் தொல்லை கொடுக்கும் வேதனையின் அளவு பக்கத்து வீட்டுக்காரனுக்கும், எதிர் வீட்டுக்காரனுக்கும் எப்படித் தெரியும்? பிரிவதற்கு முன்னல் பலப்பல முயற்சிகள் செய்து முடியாமல் போன பிறகு தான் பிரிந்தோம், புதுக் கட்சி தொடங்கினேம்.

சங்கீதப் போட்டியே நம் போக்கு!

திராவிட முன்னேற்றக் கழகம் போட்டி ஸ்தாபன அல்ல. அது பழமைக்கும், பாசிசத்துக்கும்தான் பகைமை ஸ்தாபனமே தவிர, திராவிடர் கழகத்துக்கல்ல. தலைவர் திருமணத்தை ஆதரித்திருந்தால் எனக்கு இந்த அலைச்சல்கூட இருந்திருக்காது. அரசியல் இலாபத்துக்காகவும் நாங்கள் தி. மு. கவை ஆரம்பிக்கவில்லை.

எனக்கும், தலைவருக்கும் இடையே உள்ள மனவேற்றுமையைத் தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ளலாம் என்று சர்க்கார் நினைத்தால், அது தவறு. திராவிடர் கழகத்தின் மீது சர்க்கார் அடக்குமுறையை வீசினுல், அதைத் திராவிடர் முன்னேற்றக் கழகம் கண்டிப்பாகக் கண்டித்தே தீரும். சங்கீதக் கச்சேரியில் மிருதங்கக்காரருக்கும் கஞ்சிராக்காரருக்கும் போட்டி ஏற்பட்டால் ஓங்கி ஓங்கி அடிப்பார்கள், அவர்கள் அடிப்பது ஆவர்த்தனத்தைத்தானே தவிர; ஆளை அல்ல. அந்தப் போட்டிதான் இன்று, திராவிடர் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையில் அடிக்கிற ஆவர்த்தனந்தான் திராவிடநாடு. அடிக்கிற ஆவர்த்தனத்தை சண்டை என்று சங்கீத தெரிந்தவர்கள் நினைக்கமாட்டார்கள்.

இந்தப் போராட்டத்தை அடிப்படைக் கொள்கைப் போராட்டம் என்று எவரும் நினைக்கக்கூடாது.

என்னைத் தலைவர் சோம்பேறி என்கிறுர். நான் சோம்பேறியானது வயதில்லாத தாலதன். இப்போது சோம்பேறி அல்ல என்று செய்து காட்டுகிறேன். சம்பத்தைப் பற்றி தலைவர் "நொண்டிப் பிள்ளையை வைத்துக் கொண்டு பிச்சையெடுக்கிறோம்" என்று சொல்கிறுர் சம்பத் எதிலே நொண்டி? உருவத்திலா, உயரத்திலா, அழகிலா, அல்லது அறிவிலா? அப்படித்தான் சம்பத்தை வைத்துப் பிழைக்கிறோம் என்றுல் அதற்குப் பெரியாரா கோபப்படுவது? அவனை வைத்துக்கொண்டு தாங்கள் பிழைக்கலாம் என்று கருதினவர்களுக்கல்லவா எரிச்சல் வரவேண்டும்? பெரியார் பெருமை அடைய அல்லவா வேண்டும்! என்னை என் வீட்டார் பதினைந்துவருடங்களாக தலைவர் பின்னல் அனுப்பி வைக்கவில்லையா? அதேபோல அவர்கள் வீட்டார் சம்பத்தை ஏன் என்னோடு அனுப்பி வைக்கக் கூடாது?

திராவிடர் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையில் ஏற்பட்ட மோதுதல் பதவிப் போராட்டத்துக்கோ, தேர்தலுக்கோ, அல்லது தலைமை பீடத்தைக் கைப்பற்றவோ அல்ல.

இப்போது தடுப்போர் அப்போது வரவில்லையே!

எதைத் தலைவர், எனக்காகச் செய்யவில்லை? தூத்துக்குடி மாநாட்டில் "இதோடு ஒழிந்தான் அண்ணுத்துரை" என்று நண்பர்கள் பூரிப்படைந்த பிறகு, எனக்காக ஈரோட்டில் ஒரு தனி மாநாடு கூட்டி, அந்த ஸ்தானத்தை எனக்குக் கொடுக்கவில்லையா? பெட்டிச் சாவியைத் தருகிறேன் என்றுரே, எனக்குப் பெரியாரிடமிருந்து கிடைத்ததைவிட அன்பு, ஆதரவு, செல்வாக்கு வேறு எவருக்குக் கிடைத்திருக்கிறது? எனக்கு என் தலைவரிடம் கோபம் உண்டாகப்போகிறது?

என்னைத் தலைவர் குறை சொல்லுகிறுர் என்று நான் வருத்தப்படவில்லை. தன்னைக் கொல்லச் சதி செய்கிறுர்கள் என்பதைவிடவா மற்றப் பெரிய குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. யார் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தாரோ, யார் எங்களுக்கு அரசியலில் அனுபவத்தை ஊட்டினுரோ அவரே என்மேல் சதிக் குற்றஞ் சாட்டினுர். பதினைந்து வருடங்களுக்குப் பிறகு, வீட்டைத் துறந்து வேலை தேடாமல் உழைத்த பிறகு தலைவர் சதி செய்கிறேன் என்றுல் யார்தான் வேதனைப்படமாட்டார்கள்? இதற்குப் பின்னும் என்னுல் எப்படித் திராவிடர் கழகத்தில் இருக்க முடியும்? இப்போது போட்டி கூடாது என்பவர்களில் யாராவது அப்போது கேட்டார்களா? திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரைக் கேட்டேன். முத்தையா முதலியாரைக் கேட்டேன், எல்லோரும் செயலற்று இருந்தார்கள். இப்போது போட்டி தேவையில்லை என்பவர்கள், ஏன் இந்த முயற்சியை அப்போது செய்யவில்லை?

எப்படி இருந்தாலும் குறிக்கோள் ஒன்றே!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு திராவிடர் கழகத்துக்கும் ஒரே கொள்கைதான். எனக்கு முன்னல் பேசிய சம்பத் "இன்று கார்த்திகை போங்கள், காங்கிரசிலே சேருங்

[தொடர்ச்சி 4-ம் பக்கம்

மாலை மணி

சென்னை 12—12—49 திங்கட்கிழமை

அதிகார ஆசை

மக்களின்ஒப்புதல் பெற்ருே பெருமலோ அதிகார பீடம் ஏறியவர்கள், அப்பீடத்தை விட்டு இறங்குவதென்ருல், அது அவ்வளவு எளிதான ஒரு செயலாக இருப்பதில்லை. அதிகாரத்தின் சுவை நுகர்ச்சி அவர்களை எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்க முடியுமோ அந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிடுகிறது! "அதிகார ஆசை ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்பதற்குப் பலர் இரையாகி வருகின்றனர் என்பதை, வரலாறு அவ்வப்போது எடுத்துக் காட்டிவருகின்றது

மக்களின் சக்தி ஒன்று திரண்டு எழுந்து, அதிகார பீடத்தினின்றும், அத்தகைய "அதிகார சுவை" பருகுவோரை வலுவில் நீக்க முயலும்போது, சுவை பருகுவதையே குறிக்கோளாகக் கொண்ட ஆளவந்தார்கள், தங்கள் முழுமுயற்சியையும்—ஏன், தங்கள் கடைசி முயற்சியையும் பயன்படுத்தப் பார்ப்பார்கள். பீடத்தினின்றும் சரிந்து விழும்போது அதிகார ஆசையை, நாவசைப்பின் மூலம் காட்டிக்கொண்டே இருப்பார்கள். அத்தகையோரையும் வரலாறு படம் பிடித்துக் காட்டத் தவறுவதில்லை. அதிகார ஆசையால் ஆட்டிப்படைக்கப்படும் ஆளவந்தார் ஒருவரை, இன்றைய வரலாறு, உலகினோர்க்கு இது நாளில் அறிமுகப்படுத்தி வருகிறது. அவர்தான் சீனவின் சியாங்!

சியாங், சீனவை உலகோர்க்கு அறிமுகப் படுத்திக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது! இப்பொழுது சீன, சியாங்கை அறிமுகப்படுத்துகிறது!

சீனவில்! வெற்றி-தோல்வி யார் பக்கம் என்பது 'மதில் மேல் பூனை' மாதிரியாக இப்பொழுதில்லை. சீன முழுவதும் சிவப்பேறி விட்டது என்பது, திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது. என்ருலும் தனக்கொரு சீன உண்டு என்ற அளவில், இல்லாத 'சீன அரசாங்கத்தின்' தலைவராகவும், ஜெனரலாகவும் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்புகிருர் சியாங். அதிகார ஆசை, சிவப்பேறிய சீனவைக் காணுதவாறு அவரது கண்ணை மறைக்கிறது—மக்களின் ஒருமித்த குரலைக் கேட்காதவாறு அவரது காதை அடைக்கிறது—தனனிலை எப்படி என்பதை உணர்ந்து கொள்ளவொட்டாமல் கருத்தையும் இருட்டாக்குகிறது! என்ன செய்வார்! தோல்வியின் சுமைகளை ஒன்றன்பின் ஒன்ருகத் தாங்கத் தள்ளாடிக் கொண்டிருக்கும் சீன தேசிய அரசாங்கத்தைச் சீனவை விட்டு வெளியேற்றி பார்மோசாவில் நிலைநாட்டத் திட்டமிட்டுள்ளார், சீனவின் முன்னுள் 'தீரர்' சியாங்' இதுவும் எத்தனை நாட்களுக்கு நிலைக்கும், அவருக்கே தெரியாது!

தன் அரசாங்கத்தை நான்கு தலைநகருக்குநகர்த்திச்சென்று, இப்பொழுது பார்மோசாவிலுள்ள டெய்பேய் என்ற ஐந்தாவது தலைநகருக்கு எடுத்துக்கொண்டு ஓடுகிருர்! அவர் எடுத்துச்செல்லும் அரசாங்கத்துக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஏதும் இல்லை! அதிகார ஆசை அதையெல்லாம்செய்து பார்க்கச் சொல்லுகிறது.

களப்போர் நின்று விட்டது, இனி வளப்பெருக்கந்தான் எங்கள் வேலை என்று மா-சே-துங் முழக்கமிடத் தொடங்கி விட்டார். பிணநாற்றம் வீசிய பலபகுதிகளில் இப்பொழுது, நறுமணங் கமழத் தொடங்கி விட்டது என்று மனப்பூரிப் படைகின்றனர் சீனமக்கள். செஞ்சீனவை அதிகார பூர்வமான நாடாக ஏற்றுக்கொள்வதென்றமுடிவுக்குஐயப்பாட்டில் இது வரையில் உழன்று வந்த இந்தியா போன்ற நாடுகள் வந்துவிட்டன. அமெரிக்க-ஆங்கிலேய வல்லரசுகள் ஒத்துக்கொள்வதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லையே என்ற நிலைக்குத் திகைப்புடன் வந்து கொண்டிருக்கின்றன. கம்யூனிஸ்டுக் கொள்கையுடைய ஏனைய நாடுகள் முன்னேற செஞ்சீனவுக்கு ஆதரவு தந்து விட்டன. இந்த நிலையிலும், நிலைமையை முற்றும் உணர மறுத்து, சியாங் சீனவை இன்னமும் போர்க்களமாக்கிக் கொண்டிருக்கவே நினைக்கிருரென்ருல், அவரது அதிகார ஆசை எந்த அளவுக்குத் தலை தூக்கி இருக்கிறது!

சியாங், அதிகாரம்செலுத்துவதை மக்கள் விரும்பவில்லை! ஆனல் மக்கள்மீது தொடர்ந்து அதிகாரம் செலுத்த சியாங் விரும்புகிருர்! இந்த ஆசையை எத்தனை காலத்திற்கு நீட்டிக் கொண்டிருக்கப் போகிருர்? எத்தனை காலத்திற்குத்தான் முடியும்!

ஆக்வே, சீனநாட்டு மக்களுக்கு நன்மை தரும் வழியில் அந்நாட்டின் முன்னுள் ஆட்சித் தலைவர் சியேங் கே ஷேக், ஏதாவதொரு இறுதிச் செயல் ஒன்று இருக்கிற தென்ருல், அது, முழு ஓய்வுபெற்றுக் கொண்டு, முன்பே திட்டமிட்டிருப்பதற்கொப்ப, அமெரிக்காவிற்குச்சென்று இனிய வாழ்வு நடத்துவதுதான்! இதைச்செய்ய அவர் முன் வந்தால், அவருக்கும் நல்லது; சீனநாட்டு மக்களுக்கும் நல்லது; 'அதிகார ஆசை' என்ற சொற்ருெடருக்கு இருக்கும் கெட்டபெயரும் வளர்ந்து கொண்டே போகாமல் இருக்கும்! செய்ய முன்வருவாரா? வரவேண்டும்!

ஜெருசலம் நிர்வாகம்

ஐ. நா. ஆதிக்கத்தின் கீழ்வரும்

ஜெருசலத்தை நிரந்தர சர்வதேச ஆட்சியின் கீழ்கொண்டு வந்த விஷயத்துக்குச் சாதகமாக ஐ. நா. பொது சபை டிச. 9-ந் தேதி மன்று வோட்டளித்து, தர்மகர்த்தா கவுன்சில் முடிவு செய்யும் சாதொரு அதிகாரத்தின் கீழ், மேற்படி சர்வ தேச நிர்வாகம் ஏற்பட வேண்டுமென்றும் சபை முடிவு செய்தது.

'ஜெருசலம் நகர்' என்பதின் கீழ் இப்போதைய ஜெருசலம் முனிசிபாலிடியும் சுற்றுவட்ட கிராமங்களும், பட்டணங்களும் அடங்குமெனவும் வரையறுக்கப் பட்டது. ஜெருசலத்துக்கான விவர சட்டமுறைகளை அடுத்த கூட்டத்துக்குள் முடித்துத் தரு மாறு தர்மகர்த்தா கவுன்சிலைக் கேட்டுக்கொள்வதென்றும்பொதுச் சபை தீர்மானித்தது.

இஸ்ரேல் அயல்நாட்டு மந்திரி தோழர் ஷாரெட் மட்டும் இஸ்ரேலிலிருந்து ஜெருசலத்தைப் பிரித்தல் கூடாதென தீவிரமாய் ஆட்சேபித்தார்.

ஐ நா. வுக்கே கேடுகாலம்!

நியூயார்க், டிச. 11—

ஜெருசலத்தின் மீது சர்வதேச கட்டுப்பாடு ஏற்படுவதை எதிர்த்தே அமெரிக்கப் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

இதுபற்றி நியூயார்க் டைம்ஸ் எழுதுகையில் இதனுல் ஜெருசலம் பிரச்னை தீர்ந்துவிடப் போவதில்லை என்றும் இந்த வெற்றி; மத விஷயம் சம்பந்தமான வெற்றியே என்று ஐ. நாவிலேயே கருதப்படுகிறதென்றும் எழுதியிருக்கிறது

முடிவு தெரிந்தவுடன் இஸ்ரேல் அயல்நாட்டு மந்திரி மோஷெ ஷெரட் "ஐ. நா.வுக்கே கேடு காலம்" என்று கூறினாராம்.

அரசியல் கமிட்டியில் எதிர்த்திலிருந்த அரபுகள் சபையிலும் வெற்றி பெறும்படி செய்துவிட்டார்கள். ஜெருசலம் சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டும் என்ற பிரேரேபனை அரசியல் கமிட்டியில் வந்தபோது வோட்டில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்த இந்தியா, பாகிஸ்தான், ஹெய்டி, பிலிப்பைன்ஸ் எதியோபியா, வெனுசுலா ஆகியவைகளைத் தீர்மானத்திற்கு சாதகமாக வோட்டளிக்கும்படி செய்வதில் அரபுகள் வெற்றிபெற்றுவிட்டார்கள்.

டிட்டோவின் ரகசியப் போலீஸ் படை

டிரீஸ்டே, டிச. 11—

78000 'இன்ஸ்பெக்டர்கள்' கொண்ட ஒருரகசிய போலீஸ் படையை மார்ஷல் டிட்டோ ஏற்படுத்தியிருப்பதாகவும் இவர்கள் ஏற்கனவே பதுக்கப்பட்ட உணவு தானியங்களைக் கண்டு பிடித்து வருகின்றனர் என்று யூகோஸ்லாவியசெய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது

இரும்பு, எஃகு விலை குறைகிறது

இரும்பு எஃகு ஆலைகளின் பலதரப்பட்ட ரகங்களின் விலைகளையும் டன்னென்றுக்கு ரூ. 30 வீதம் குறைப்பதென இந்திய சர்க்கார் முடிவுசெய்துள்ளனர். இன்றியமையாப்பொருள்களின் விலையைக் குறைப்பதென்ற சர்க்காரின் கொள்கையை யொட்டியே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

கம்யூனிஸ்டு சர்க்காருக்கு பிரிட்டன் அங்கீகாரம்

லண்டன், டிச. 11—

சீனகம்யூனிஸ்டு சர்க்காரை பிரிட்டன் இருஷ்ய மனைவிக்கு முன்பே அங்கீகரித்து விடும் என்று எதிர்பார்க்கலாம். என்று மாஞ்செஸ்டர் கார்டியன் அரசியல் நிருபர் கூறுகிருர்.

அவர் மேலும் கூறுவதாவது; காமன் வெல்த் நாடுகளும் நடத்தியுள்ள ஆலோசனைகளின் வினைவாக ஒரு முடிவுக்கு வரத் தயாராகவே இருக்கின்றன. ஆஸ்திரேலியா மட்டும் பொதுத் தேர்தலுக்குப்பின் இதை வைத்து கொள்ளலாம் என்று தெரிவித்ததாகத் தெரிகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸ் காமன்வெல்த் நாடுகள் முடிவுடன் தன் முடிவை தெரிவிக்கும் என்று தோன்றவில்லை. அநேகமாக பிரான்ஸும் தன் அங்கீகாரத்தை அளித்து விடலாம்.

கடமையைச் செய்யத் தவறியவர்க்கு கல்தா!

ஜெக் பத்திரிகாசிரியருக்குச் சீட்டு

பிரேக், டிச. 11—

ஜெக் பிரபல கம்யூனிஸ்டு பத்திரிகையின் ஆசிரியரும் கட்சி பிரமுகருமானவிலெமீசோவிதனது 'போல்ஷிவிக் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை என்பதற்காக ஆசிரியர் பதவியிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிருர். இவரும் இவரைப்போலவே டிஸ்மிஸ் செய்யப்பட்ட இதரர்களும் டிட்டோவின் ஆதரவாளர்களாக இருப்பார்களோ என்ற சந்தேகம் பிரேகிலுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

அறிவுக் கதிர்!

உலக மக்களுக்குப் போதுமான உணவும், ஆடையும், வீடும் போதுமானதற்கு மேலாகவே உலகில் உண்டாக்கப்படுகிறது என பல மெய்ஞ்ஞானிகளும் கூறுகின்றனர்கள். அப்படி இருந்தும், போதாமையும், இல்லாமையும் மக்களைப் பண்டைக்காலமுதல்வாட்டிவருகின்றன. இந்த அதிகம் எந்தமக்களுக்கு உபயோகிக்கப்படுகின்றது? மக்கள் உழைப்பால் உண்டான இந்த "அதிகம்" மக்கள் வயிற்றுக்கு உதவாமல், உலக ஆடம்பரங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதால், பண்டைக் காலமுதல் நாளதுவரை உலகம் படும் துயரத்திற்கு, இந்தத் துர்விநியோகம் முதற காரணமாயிருக்கிறது. இந்த "அதிகம்" கோவில்களுக்கும், குளங்களுக்கும், மூடபக்தியை வளர்க்க உபயோகப்பட்டு வருகின்றது. மனிதனுடைய வீண் பெருமையை வளர்க்கும் நவரத்தினங்களுக்கும், நகைகளுக்கும் உபயோகப்பட்டு வருகின்றது. கல்லுக்கும், செம்புக்கும் செய்யும் நிவேதனங்களால் விளையும் மூடநம்பிக்கையை வளர்க்க உதவுகின்றது. மனிதனை மனிதன் கொல்லும் ஆயுதங்களுக்காகச் செலவிடப்படுகிறது. இந்த "அதிக"த்தைக்கொண்டு டம்பத்தை வளர்க்கும் வசதிகளுக்கு செலவிடப்படுகின்றது. இந்த மிகுதியை தானத்திலும், தருமத்திலும செலவிட்டு மக்களைச்சோம்பேறியாக்கும் காரியம் செய்யப்படுகிறது. சத்திரங்களும் சாவடிகளும், அன்ன தானங்களும், சொர்ணதானங்களும், பிராமணர்கட்கும், மடாதிபதிகட்கும், வழக்கிற்கும், வில்லங்கத்திற்கும், உதவுவது இந்த மிகுதியன்ருே!

— சிந்தனைச் சிற்பி
ம. சிங்காரவேலர்

ஏக கட்சி சர்வாதிகார ஆட்சியில் ஈதென்ன அதிசயம்!

—(o)—

பொதுமக்களின் வரிப்பணம்கொண்டு நேர்மைக்கு 'வெடி' வைக்கின்றனர்!

அசிடலில் கவர்னர்கள்கலந்து கொள்ளாது, மாகாண நிர்வாகத்தில் பொது நோக்குடன்—எவ்வித கட்சி சார்புமின்றி—இருந்து வரல் வேண்டுமென்று ஆண்டாண்டு காலமாக இருந்து வந்திருக்கும் பழக்கத்தை மீறி, மேற்கு வங்க கவர்னர் டாக்டர் கைலாசநாத் கட்ஜு டிசம்பர் 9-ந் தேதியன்று ஐ.மா. மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து, சொற்பொழிவாற்றி சென்று செய்திக்குறிப்பொன்று கூறுகிறது. அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் புருஷோத்தமதாஸ் தாண்டன் வேசகையில், சட்டசபைத் தலைவர்கள் அரசியலில் கலந்து கொள்ளுதல் கூடாதென்ற தடையைத் தான் மீறிவிட்டதாகவும் கூறி பெருமைபட்டாராம்.

காங்கிரசாரின் ஏகபோக ஆதிக்கப் போக்கையுணர்ந்தோர்க்கு இதெல்லாம் ஆச்சரியமூட்டக்கூடியவையல்ல. பொதுமக்களின் வரிப்பணத்தைக் கொண்டு நடக்கும் சர்க்கார் செலவில், காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு உறுப்பினர் சேர்ப்பதும், சென்னைக்கு தேர்தலும் அன் முடிச் மூச்சியாயிருந்து வருகையில் பொதுமக்கள் பணத்தை சம்பளமாகப் பெற்று வரும் இவர்தான் காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்வதில் தானு குடிமுழுகிப் போகிறது. காங்கிரஸ் கட்சி வேறு, பொது மக்கள் மன்றம் வேறு என்ற தன்மையில் எதுதான் நடக்கிறது இந்நாட்டில் என்று கேட்கிருேம். சரியாகவே, தலைவர்களோ தங்கள் கையில் வந்து கிடைத்துவிட்ட அதிகாரத்தைக் கொண்டு சர்வாதிகார முறையில் தானே ஆட்சி நடத்தி வருகின்றனர்! அனைத்திந்திய வானொலி அவர்கள் பிரசாரத்துக்கு, பத்திரிகைகள் அனைத்தும் அவர்களைத் துதிபாடுதற்கு! எதிர்த்து பிரசாரம்விழையும்பத்திரிகைகள்-ஸ்தாபனங்கள் அனைத்திற்கும் 144-ம்வாய்ப்பூட்டும்.

ஏக கட்சி சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாட்டில், அயோக்கியும், குண்டாந்தடியும் துணைகொண்டு செயல்களைக்கும்பொழுது பீடமேறி இருக்கும் நாட்டில் நீதியும் நேர்மையும்தொலைநோக்கும் நிலைபெறுதல் எங்ஙனம்!

நல்லோர் உழைப்பை நாடு பெற நிறுவப்பெற்றதே நம் கழகம்

வேறு வழியின்றி வேதனையோடுதான் வீட்டைவிட்டு வெளியேறினேம்!

கொண்ட கொள்கை-கோட்பாடுகள் குலைவது கண்டு மனம் சகியோம்!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெரியாரோடு நான் இருந்தபோது எனக்கும், பெரியாருக்கும், எங்களைச் சார்ந்த நண்பர்களுக்கும் தேசத் துரோகி, மதத் துரோகி, பிராமண துரோகி என்ற பட்டங்களை நாடும், மக்களும், எங்களுக்களித்தது. இப்போது, குரு துரோகி என்ற நான்காவது பட்டம் எனக்களிக்கப்பட்டிருக்கிறது. அந்த மூன்றும் எப்படித் தவறு என்று நாடு உணர்ந்து கொண்டதோ, அப்படியே குரு துரோகி என்ற பட்டமும் தானாகவே நீங்கிவிடும், பொய்யாக்கப்படும். காலம் மிகமிகக் கண்டிப்பான எஜமானன். காலம் எந்த உண்மையையும் காட்டிவிடும். எத்தனை பழிச் சொற்கள் என் மேல் சுமத்தப்பட்டாலும், காலம் இத்தனையையும் தூக்கி எறிந்துவிடும்.

ஆலம் விழுதே தவிர, வாழைக்கன்றல்ல நம் கழகம்

திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்த பிறகு, யார் யார் சுயமரியாதைக் கோட்பாட்டைக் கொண்டவர்களோ, அவர்களுக்கெல்லாம் ஒருவித மனபயகம் ஏற்பட்டிருக்கிறது. பெரியாரும் அண்ணாவும் பிளவுபட்டால், நம் புனிதமான கோட்பாடுகள் எதிரிகளால் நாசமாக்கப்பட்டுவிடுமே என்ற மனக்குழப்பம் தோன்றியிருக்கிறது. அவர்களுக்குக் கூறுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகத்தின் கோட்பாடுகளைக் கொண்டே பணியாற்றும் என உறுதிகூறுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் 'ஆலம் விழுதே தவிர, வாழைக்கன்றல்ல'. ஆலமரத்தில் விழுது தோன்றினால் அது அடிமரத்துக்கு வலிவு. ஆனால் வாழைக்கன்று தாய் வாழையை அழிக்கும்.

ஏன் வேறு பெயரில் இயங்கக் கூடாது என்று பலர் கேட்பார்கள். வேறு பெயரில் இயங்கினால், இப்போதிருப்பதை விட இன்னும் சற்று சந்தேகம் அதிகமாகும். எனக்கும், என் நண்பர்களுக்கும் பெரியார் மணம், பொருந்தா மணம் என்று தெளிவாகத் தெரிந்தது. மாற்றுக்கட்சித் தோழர்கள் கையாண்டி செய்வார்களே என்று மருண்டோம். இதைத் [illegible]ணிவரிடம் தெரிவித்தோம். அவர் தம் மணத்தைக் கைவிட ஒப்பவில்லை. அதற்கு பிறகே வெளிவந்தோம். அதே திட்டங்கள், கோட்பாடு, கொள்கை இத்தனையிலும் எங்களுக்குப் பற்று, நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அவைகளை நிறைவேற்ற அத்தத் தலைவர் தலைமையிலிருந்து பணியாற்ற முடியாது என்று தெளிவாகத் தெரிந்தது. ஆகையால்தான் முற்றும் வேறு பெயரில் இயங்க ஆசைப்படவில்லை.

இரண்டு பட்டிருப்பது இன்பமா தரும்!

எனக்கு முன்னால் பேசிய பெத்தாம்பாளையம் பழனிச்சாமி கூறியபடி பொதுப் பணியிலிருந்தே விலகிவிடுகிறேன் என்றேன். பொதுப் பணியிலிருந்தே விலகுகிறேன் என்றால் மாற்றுக் கட்சிக்குப் போவதோ அல்லது வேலைத் தேடப் போவதோ அல்ல. எனக்கு இப்போது வயது 40-க்கு மேல் ஆகிறது. இந்நிலையில் வேலை தேடிப் போவதோ, வேலையில் இருந்து பணியாற்றுவதோ சற்று சங்கடமான விஷயம். வேறு கட்சிக்கு ஏன் போகமாட்டேனென்றால், வேறு கட்சிகளில் நாங்கள் இதுவரையில் சொல்லி வந்த கொள்கைகள் கிடையாது. அரசியலில் தனி நாடு, சமுதாயத்தில் சமத்துவம் சுயமரியாதை, பொருளாதாரத்தில் பொது உடைமை இந்த மூன்றும் சேர்ந்து எந்தக் கட்சியிலும் இல்லை ஆகையால், வேலை தேடப் போவதோ வேறு கட்சிக்குப் போவதோ முடியாத காரியம்.

மூன்றாவது பாதை திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவது. திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவது ஊரை இரண்டாக்கிவிடும். அண்ணனும் தம்பியும் இரண்டுபட்டால் அது எவ்வளவு தூரம் கேலிக்குரிய விஷயமாக இருக்கும்? இப்பொழுதே பார்க்கலாம். தோழர் சம்பத் திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் அவர் தம்பி செல்வன் திராவிடர் கழகம். அவருடைய மகன் திராவிட முன்னேற்றக் கழகம். இரண்டு கழகங்களாக இருக்கும்போதே இப்படி இருந்தால் கைப்பற்றினால் நிம்மதி இருக்குமா? இப்போது இந்த மேடையை பார்க்கிறேன். தோழர் முத்துதனபால் இல்லை, தோழர் பி. ஆர். பொன்னுசாமி இல்லை. சந்தோஷம் தருகிறது இந்தக் காட்சி? அதேபோல நாளை பெரியார் வந்தால், தோழர் கே. கே. நீலமேகம் இருக்கமாட்டார். வி. சின்னத்தம்பி இருக்கமாட்டார். அவருக்குத்தான் சந்தோஷம் உண்டாகுமா? திராவிடர் கழகத்தை கைப்பற்றினால் சாக்காட்டு முறை இல்லாமல் காங்கிரஸ்காரர்கள் கேலி இல்லாமல் நம் இயக்கத்திலே குழப்பம் ஏற்படும். ஆகையால் இந்த மூன்று வழிகளையும் கைவிட்டுவிட்டேன். நான்காவது பாதைதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

உழைப்பாளிகளை உலகு இழந்திருக்கும்!

பொதுவாழ்விலிருந்து நான் விலகினால், இந்த கொள்கைகளைக்கொண்டு கலைத்துறையில் என்னால் பணியாற்ற முடியும் இன்னும் சொல்கிறேன் இலாபத்தோடு, மதிப்போடு பணியாற்ற முடியும். நான் பொதுவாழ்வில் சலிப்படைந்து ஒய்ந்திருந்தபோதெல்லாம், கலைத்துறையில் பணியாற்றி இருக்கிறேன். என் நண்பர்கள்கூட "சினிமா உலகத்துக்குப் போனவன் திரும்ப வரபோகிறான்?" என்று சந்தேகித்தார்கள். இன்னும் சொல்லுகிறேன், எனக்குப் பொதுவாழ்வில் ஒய்வு கிடைத்தால் கலைத்துறையில் பணியாற்றுவேன்.

நான் போகலாம். ஆனால் என் நண்பர்களோடு இழக்க வேண்டும். தோழர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், அன்பழகன், சம்பத், கருணாநிதி, சீனிவாசன், சிற்றரசு, [illegible]சத்தம்பி, வள்ளிமுத்து, சித்தையன் ஆகிய பலபேருடைய உழைப்பையும் நாடு இழந்திருக்கும். யார் யார் திராவிடர் கழகத்திலிருந்து பணியாற்றினார்களோ, யார் யார் போர் வீரர்களாக இருந்தார்களோ, பேச்சில், எழுத்தில் உழைப்பில் நம் கொள்கையைப் பரப்பப் பாடுபட்டார்களோ அத்தனைபேரையும் நாடு இழந்திருக்கும். அத்தனைபேரும் திராவிடர் கழகத்திலிருந்து பணியாற்ற முடியாது என்று தெரிவித்துவிட்டனர். வேறு கட்சிக்கும் அவர்களால் போகமுடியாது இதனால்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பிப்பதைவிட வேறு வழியே யில்லாமல் போய்விட்டது. வீடு ஜப்தியாகும்போது வீட்டைத்தான் விட்டுவிட்டு வருவோமே தவிர, வீட்டிலுள்ள நம் தந்தையின் ஓவியம், தாயின் படம், நாம் உயிருக்கு உயிராய் நேசித்த நூல்கள் ஆகிய வகைகளை எல்லாம் எடுத்துக்கொண்டுதானே வருவோம். அதேபோலத்தான் கட்சியை விட்டு வெளியேறி புதுக்கட்சி தொடங்கியபோது, அதிலுள்ள கொள்கைகளையும், கோட்பாடுகளையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம்.

அங்கில்லாதது இங்கு?

முன்பெல்லாம் யார் யார் என் வரவை ஆர்வத்தோடு எதிர்பார்த்தார்களோ. அவர்களில் சிலருக்கு இப்போது ஆத்திரம் ஏற்பட்டிருக்கும். முன்பெல்லாம் யார் யார் மாலையும் கையுமாக இரயில்வே ஸ்டேஷனில் எனக்காகக் காத்திருந்தார்களோ, அவர்களில் சிலர் இப்போது வெறுத்திருப்பார்கள் ஏன் அவர்களுக்கு மனக்கஷ்டம்?

திராவிடர் கழகத்தில் இருந்தபோது எனக்கில்லாத செல்வாக்கு, இங்கு என்ன புதிதாக ஏற்பட்டிருக்கிறது? முன்பைவிட மேன்மை என்ன அடைந்திருக்கிறேன். பெரியார் என்று எழுதினால் அதற்கு கீழே அண்ணா என்று சுவரில் எழுதியிருக்கிறீர்கள் அவரைத் தலைவர் என்றால், என்னைத் தளபதி என்றழைத்திருக்கிறீர்கள் இன்னும் சொல்லப்போனால் ஜஸ்டிஸ் கட்சிக்கு, திராவிடர் கழகத்துக்கு திருவாரூர் மாகாணமாநாட்டிலிருந்து இப்போது நடந்த ஈரோடு மாநாடுவரை, பதினைந்து வருடங்களாக நான்தான் செயலாளர். இன்னமும் அந்த ஸ்தானம் பூர்த்தி செய்யப்படாமலே வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரிவால் நாங்கள் பட்ட வேதனை, சிந்திய கண்ணீர் உங்களுக்கென்ன தெரியப் போகிறது? தந்தையை மகன் பிரிகிறான் என்பதுதான் அந்த வீதியிலிருப்பவர்களுக்குத் தெரியுமே தவிர, பிரியும் மகனின் உள்ளத்தில் தோன்றித் தொல்லை கொடுக்கும் வேதனையின் அளவு பக்கத்து வீட்டுக்காரனுக்கும், எதிர் வீட்டுக்காரனுக்கும் எப்படித் தெரியும்? பிரிவதற்கு முன்னால் பலப்பல முயற்சிகள் செய்து முடியாமல் போன பிறகு தான் பிரிந்தோம், புதுக்கட்சி தொடங்கினோம்.

சங்கீதப் போட்டியே நம் போக்கு!

திராவிட முன்னேற்றக் கழகம் போட்டி ஸ்தாபன அல்ல. அது பழமைக்கும், பாசிசத்துக்கும்தான் பகைமை ஸ்தாபனமே தவிர, திராவிடர் கழகத்துக்கல்ல. தலைவர் திருமணத்தை ஆதரித்திருந்தால் எனக்கு இந்த அலைச்சல்கூட இருந்திருக்காது. அரசியல் இலாபத்துக்காகவும் நாங்கள் தி. மு. கவை ஆரம்பிக்கவில்லை.

எனக்கும், தலைவருக்கும் இடையே உள்ள மனவேற்றுமையைத் தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ளலாம் என்று சர்க்கார் நினைத்தால், அது தவறு. திராவிடர் கழகத்தின் மீது சர்க்கார் அடக்குமுறையை வீசினால், அதைத் திராவிடர் முன்னேற்றக் கழகம் கண்டிப்பாகக் கண்டித்தே தீரும். சங்கீதக் கச்சேரியில் மிருதங்கக்காரருக்கும் கஞ்சிராக்காரருக்கும் போட்டி ஏற்பட்டால் ஓங்கி ஓங்கி அடிப்பார்கள், அவர்கள் அடிப்பது ஆவர்த்தனத்தைத்தானே தவிர; ஆளை அல்ல. அந்தப் போட்டிதான் இன்று, திராவிடர் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், இடையில் அடிக்கிற ஆவர்த்தனந்தான் திராவிடநாடு. அடிக்கிற ஆவர்த்தனத்தை சண்டை என்று சங்கீத தெரிந்தவர்கள் நினைக்கமாட்டார்கள்.

இந்தப் போராட்டத்தை அடிப்படைக் கொள்கைப் போராட்டம் என்று எவரும் நினைக்கக்கூடாது.

என்னைத் தலைவர் சோம்பேறி என்கிறார். நான் சோம்பேறியானது வாய்ப்பில்லாததால்தான். இப்போது சோம்பேறி அல்ல என்று செய்து காட்டுகிறேன். சம்பத்தைப் பற்றித் தலைவர் "நொண்டிப் பிள்ளையை வைத்துக் கொண்டு பிச்சையெடுக்கிறோம்" என்று சொல்கிறார் சம்பத் எதிலே நொண்டி? உருவத்திலா, உயரத்திலா, அழகிலா, அல்லது அறிவிலா? அப்படித்தான் சம்பத்தை வைத்துப் பிழைக்கிறோம் என்றால் அதற்குப் பெரியாரா கோபப்படுவது? அவனை வைத்துக்கொண்டு தாங்கள் பிழைக்கலாம் என்று கருதினவர்களுக்கல்லவா எரிச்சல் வர வேண்டும்? பெரியார் பெருமை அடைய அல்லவா வேண்டும்! என்னை என் வீட்டார் பதினைந்துவருடங்களாக தலைவர் பின்னால் அனுப்பி வைக்கவில்லையா? அதேபோல அவர்கள் வீட்டார் சம்பத்தை ஏன் என்னோடு அனுப்பி வைக்கக் கூடாது?

திராவிடர் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையில் ஏற்பட்ட மோதுதல் பதவிப் போராட்டத்துக்கோ, தேர்தலுக்கோ, அல்லது தலைமை பீடத்தைக் கைப்பற்றவோ அல்ல.

இப்போது தடுப்போர் அப்போது வரவில்லையே!

எதைத் தலைவர், எனக்காகச் செய்யவில்லை? தூத்துக்குடி மாநாட்டில் "இதோடு ஒழிந்தான் அண்ணாத்துரை" என்று நண்பர்கள் பூரிப்படைந்த பிறகு, எனக்காக ஈரோட்டில் ஒரு தனி மாநாடு கூட்டி, அந்த ஸ்தானத்தை எனக்குக் கொடுக்கவில்லையா? பெட்டிச் சாவியைத் தருகிறேன் என்றாரே, எனக்குப் பெரியாரிடமிருந்து கிடைத்ததைவிட அன்பு, ஆதரவு, செல்வாக்கு வேறு எவருக்குக் கிடைத்திருக்கிறது? எனக்கு ஏன் தலைவரிடம் கோபம் உண்டாகப்போகிறது?

என்னைத் தலைவர் குறை சொல்லுகிறார் என்று நான் வருத்தப்படவில்லை. தன்னைக் கொல்லச் சதி செய்கிறார்கள் என்பதைவிடவா மற்றப் பெரிய குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. யார் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தாரோ, யார் எங்களுக்கு அரசியலில் அனுபவத்தை ஊட்டினாரோ அவரே என்மேல் சதிக் குற்றஞ் சாட்டினார். பதினைந்து வருடங்களுக்குப் பிறகு, வீட்டைத் துறந்து வேலை தேடாமல் உழைத்த பிறகு தலைவர் சதி செய்கிறேன் என்றால் யார்தான் வேதனைப்படமாட்டார்கள்? இதற்குப் பின்னால் என்னால் எப்படித் திராவிடர் கழகத்தில் இருக்க முடியும்? இப்போது போட்டி கூடாது என்பவர்களில் யாராவது அப்போது கேட்டார்களா? திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரைக் கேட்டேன். முத்தையா முதலியாரைக் கேட்டேன், எல்லோரும் செயலற்று இருந்தார்கள். இப்போது போட்டி தேவையில்லை என்பவர்கள், ஏன் இந்த முயற்சியை அப்போது செய்யவில்லை?

எப்படி இருந்தாலும் குறிக்கோள் ஒன்றே!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு திராவிடர் கழகத்துக்கும் ஒரே கொள்கைதான். எனக்கு முன்னால் பேசிய சம்பத் "இன்று கார்த்திகை" போங்கள், காங்கிரசில் சேருங்

[தொடர்ச்சி 4-ம் பக்கம்]

6 கோடி கடன் கொடுத்தால் ஆவன செய்வோம்

கிராம மக்களிடம் கெஞ்சுகிறது சென்னை சர்க்கார்

திராவிடத்தின் அவல நிலைக்கோர் எடுத்துக்காட்டு

பொது மக்கள் சர்க்காருடன் ஒத்துழைத்து தற்போது கைவசமுள்ள திட்டங்களைக் கைவிட்டால் பொது மக்கள் இன்னும் அதிக கஷ்டங்களுக்குள்ளாவார். அதனால் பொது மக்களிடமிருந்து 6 கோடி ரூபாய் கடன் வாங்கி இத் திட்டங்களை நிறைவேற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொது மக்கள் கொடுக்கப் போவது வட்டி கிடைக்கக் கூடிய கடன் தான். அது சர்க்காருக்குக் கொடுக்கும் இனாம் அல்ல என்பதை கிராம வாசிகள் நன்கு உணர வேண்டும்.

என்று சென்னை முதல மந்திரி தோழர் குமாரசாமியார் அண்மையில் திருச்சியை அடுத்துள்ள கிராமம் ஒன்றில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட நாட்டின் அவல நிலையை விளக்க, அமைச்சர் குமாரசாமியாரின் இந்தப் பேச்சே போதுமானது. தன்னைப் படைத்த ஆண்டவனுக்கு [illegible] காணிக்கை கொடுத்து ஆண்டியானவன் திராவிடன். ஆண்டவனுக்கு மாத்திரம் அல்ல; அரசாங்கத்துக்கும் காணிக்கை செலுத்தினால்தான் வாழ்வு உண்டு என்ற நிலை தோன்றியிருக்கிறது இன்று. இன்று 6 கோடி ரூபாய் கடன் கொடுத்தால் ஆகவேண்டிய வேலைகளைச் செய்வோம் என்கின்றனர் ஆளவந்தார்கள். ஏன்? கையிலே காசில்லை. கடன் கொடுக்க மத்திய ஆட்சியாளரும் கடன் தர முடியாது என்று மறுத்து விட்டனர். ஆகவே, கிராம மக்களைக் கடன் கேட்கின்றனர். எப்படியிருக்கிறது ஆட்சி முறை!

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழியைச் சிரமேற்தாங்கி நடக்கும் பத்தினியைப்போல மத்திய சர்க்காரிடம் இம்மாகாணம் மண்டியிட்டுக் கிடக்கவேண்டும். ஆனால் அவசியமான செலவுகளுக்குக் கடன்கூட கொடுக்க மாட்டார்கள். சரி, தொலைந்து போகட்டும், அவர்களால்தான் கடன் கொடுக்க இயலவில்லை; அல்லது விருப்பமில்லை என்றே வைத்துக்கொள்வோம். இம்மாகாண ஆட்சியாளர் செய்ய வேண்டியதென்ன?

'ஐயா, உங்களால் முடியாவிட்டால் சொல்லி விடுங்கள். நாங்களாவது, எங்கள் நிலைமைக்கேற்றபடி உள்ளதை வைத்துக்கொண்டு தனிக் குடித்தனம் பண்ணிப் பார்க்கிறோம். நீங்கள் எங்கள் விஷயத்தில் தலையிடாமல் சற்றே விலகியிருங்கள்' என்றல்லவா சொல்ல வேண்டும். அதை விடுத்து யார் கடனாக்கிக் காலங்கழிக்கவேண்டிய நிலைமையிலிருக்கின்றனரோ, யார் ஆட்சியாளரின் ஆதரவை எதிர்நோக்கி வாழ வேண்டிய நெருக்கடியான நிலைமையிலிருக்கின்றனரோ அப்படிப் பட்டவர்களிடமே வந்து கையேந்தி நிற்பது அழகா, ஆண்மையா, அறிவுடைமையா என்பதை வாசகர்களே சிந்தித்துப் பார்க்கட்டும்.

தற்போதுள்ள திட்டங்களைக் கைவிட்டால், பொது மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும். ஆகவே, கடன் கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்றால், இது எந்த நீதியில் அடங்கும்? கடன் படக் கூடிய நிலைமை எப்படி வந்தது? வரி மூலம் மக்கள் கொட்டிக் கொடுக்கும் பொருள்களெல்லாம் எங்கே போகிறது? வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் போதவில்லையென்றால், வடநாட்டுக்குத் தரும் காணிக்கையைச் சற்றுக் குறைத்துத்தான் தொலைக்கட்டுமே. அதற்கு வடவர் சம்மதிக்கவில்லையானால், அவர்களுடைய உறவு எதற்கு?

எனவே, கிராம மக்களிடம் கடன்கேட்பது சுதந்தர சர்க்காருக்கு அழகல்ல. அது கடன்தானே யொழிய இனாமல்லவே என்று குமாரசாமியார் சொல்லுகிறார். இது பொருந்தாப் பேச்சு. கடன் தருவதற்கு ஏற்ற நிலைமையில் இன்று கிராம மக்கள் இருக்கின்றனரா? தமிழ் நாட்டுக் கிராமங்கள் ஏழ்மையின் உறைவிடம் என்பதை அறியாரா அமைச்சர்?

ஆகவே, சென்னை ஆட்சியாளர் இவ் விஷயத்தில் செய்ய வேண்டிய பணி என்னவென்றால், சென்னை மாகாணத்திலிருந்து மத்திய சர்க்காருக்குப் போகும் மொத்த காணிக்கையில் 6 கோடி ரூபாயை குறைத்துக்கொண்டு எஞ்சியதையே அனுப்பவேண்டும். ஏன், என்று மத்திய ஆட்சியாளர் கேட்டால், 'நாங்கள் என்ன செய்வது இது எங்கள் மாகாண மக்கள் மன்றத்தீர்ப்பு!' என்று சொல்லிவிட வேண்டும். பிறகு என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

ரஷ்யாவுக்கு யு. எஸ் உரேனியம்

வாஷிங்டன், டிச. 10— கலிபோர்னியா, சிகாகோ, வாஷிங்டன் ஆகிய இடங்களில் ரஷ்ய உளவாளர்கள் தொல்லை 1943-ல் அதிகமாக இருந்ததென்றும், யு. எஸ் உரேனியத்தை அனுப்பாவிட்டால் கள்ளமார்க்கெட்டில் வாங்கிக்கொள்வதாக ரஷ்யா கூறியதென்றும் உரேனியம்பற்றிய புதுவிவரங்கள் ரஷியாவுக்கு தெரியாமல் இருப்பதற்காக ஒரு கப்பலில் உரேனியம் ரஷியாவுக்கு அனுப்ப அனுமதிக்கப்பட்டது என்றும் லெப். ஜெனரல் க்ரோவ்ஸ் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைத் தடுப்புக் கமிட்டிமுன் கூறினார்.

காஷ்மீரைக் காக்க எவ்விலையும் கொடுக்குமாம் பாக்.

காஷ்மீர் பிரச்னை தீராத வரையில் இந்தியா—பாகிஸ்தான் டொமினியன்களுக்கிடையே ஒருமைப்பாடு சாத்தியமில்லையென்பதாக பாகிஸ்தான் பிரதமர் தோழர் லியாகத் அலிகான் கோசத்தில் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். 'இந்தியா பலாத்காரமாக காஷ்மீரை அடித்துக் கொண்டு போவதை பாகிஸ்தான் விட்டுவிடாது. எந்த விலை கொடுத்தும் தடுத்தே தீரும்' என்று அவர் மேலும் குறிப்பிட்டார். காஷ்மீர் பிரச்னை சமாதான முறையில் தீர வேண்டுமென தோழர் நேரு மனப்பூர்வமாக விரும்புவாரேயானால், அவர் தனது வார்த்தைகளை நடவடிக்கை மூலம் காட்டி, தகராறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமெனத் தெரிவித்தார் தோழர் லியாகத் அலி.

வெட்டுக் கிளி ஒழிப்பு மாநாடு

டமாஸ்கஸ், டிச 10— பக்கத்திலுள்ள மோஸலிலிருந்து வந்த வெட்டுக் கிளி ஒழிப்பு மாநாடு ஒன்றைக் கூட்டும்படி சிரிய சர்க்கார் இராக் சர்க்காரை கேட்டுக் கொண்டிருக்கிறது.

இத்தாலியில் கம்யூனிஸ்டு எதிர்ப்புக்கட்சி

ரோம், டிச. 10— புது கம்யூனிஸ்டு எதிர்ப்புக் கட்சி இத்தாலியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இக்கட்சி செவ்வாயன்று பிளாரன்ஸில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு சோஷலிஸ்ட் ஐக்கிய கட்சி என்று பெயர்.

மார்க்ஸிஸத்தை எதிர்த்து, தேசியத்தை இக்கட்சி ஆதரிக்கிறது.

இலங்கை கம்யூனிஸ்டுகள் சமாதான காங்கிரஸ்

கொழும்பு, டிச. 9— காமன்வெல்த் மாநாடு நடைபெறும் அதே சமயத்தில் கொழும்பில் சமாதான காங்கிரஸ் ஒன்றை நடத்த இலங்கை கம்யூனிஸ்டுகள் திட்டம் போட்டிருக்கின்றனர். பிரபல பிரெஞ்சு அணுசக்தி விஞ்ஞான நிபுணரும் நோபல் பரிசு பெற்றவருமான ஜோலியட் க்யூரியை வரவழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஏப்ரலில் பாரிஸில் நடைபெற்ற சமாதான காங்கிரஸுக்குச் சமசமத்துவமாக இதைச் செய்ய கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டு வருகின்றனர்.

இந்தியாவுடன் வர்த்தகத்தைப்பெருக்க கனடா ஆவல்

ஒட்டாவா, டிச. 9— இலங்கை காமன்வெல்த் மகாநாட்டிற்கு, கனடாவின் சார்பில், தானே செல்லப்போவதாக பார்லிமெண்டில் அறிவித்த பியர்சன் இந்தியா பாகிஸ்தானுடன் கனடா தன் வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்புகிறதென்றும் கனடா தூதுக்குழு புதுடில்லிக்கும் பாகிஸ்தானுக்கும் செல்ல விரும்புகிறது என்றும் தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்காவில் கலகம் மூளும்

—(0)—

போயர் வெற்றிநாளில் மலானுக்கு எதிர்ப்பு அதிகரிக்கும்

டர்பன், டிச. 9— போயர் போரில் ஜுலுக்கள் மீது அடைந்த வெற்றியைக் குறித்துக்கொண்டாட வெள்ளையர்கள் திட்டம் போட்டிருக்கின்றனர். இம்மாதம் 16-ல் இந்த வெற்றிதினம் கொண்டாடப் படவிருக்கிறது. நேட்டாலில், சுதேசிகள் கலகத்தில் இறங்கலாம் என்று பரவும் வதந்தி தென்னாப்பிரிக்க இந்தியர்களிடையே பெரும் பீதியைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

எவ்வாண்டும் போலல்லாது இவ்வாண்டு அத்தினத்தில், மலான் சர்க்காருக்கு ஏகமாக எதிர்ப்பு இருக்கும் என்று தெரிகிறது.

இக்கலவரம் ஏற்பட்டால், அதை ஒடுக்குவதற்காக போலீஸில் லீவுகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. பிரிடோரியாவில் போர் வெற்றி நினைவுச் சின்னத்தைத் திறந்து வைக்கும் விழாவிற்குச்செல்லும் போலீஸ்காரர்களுக்குப் பதிலில் வேறு ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

டர்பன் போலீசைச் சேர்ந்த மேஜர் பெண்ட்போர்ட் இந்தியர்களை பீதியடையவேண்டாம் என்று கேட்டுக்கொண்டும், நேட்டால் இந்திய காங்கிரஸைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். எப்பேர்ப்பட்ட நிலைமையையும் போலீஸ் அடக்கிச் சமாளித்துவிடும் என்று அவர் தைரியம் கூறும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மலானின் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இத்தினத்தில் தகராறு ஏற்படுவது சாத்தியமென்று, டெய்லி டெலிகிராப் அயல்நாட்டு விவகார ஆசிரியர் கூறுகிறார். இவர் சமீபத்தில்தான் தென்னாப்பிரிக்காவிலிருந்து லண்டன் சென்றிருக்கிறார். மலான் சர்க்கார் பதவிக்கு வந்ததிலிருந்தே பிரிட்டிஷ் எதிர்ப்பு மனப்பான்மை சுதேசிகளிடையே அதிகரித்திருப்பதாக அவர் கூறுகிறார். —[illegible]

ஆஸ்திரியா சமாதான உடன்படிக்கை

ரஷ்யா-மேற்கு வல்லரசுகள் தகராறு

லண்டன், டிச. 9— ஆஸ்திரியா சமாதான உடன்படிக்கை விஷயமாக பின்கண்ட விஷயங்களில் மேற்கு வல்லரசுகளுக்கும், ரஷ்யாவுக்குமிடையே அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

1. ஆயுதம் பயிற்சிபெற்ற அந்நிய வல்லுனர்களையும், டெக்னிஷியன்களையும் ஆஸ்திரியா அமர்த்திக்கொள்ளலாமா? (அந்நிய நாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்க ஆஸ்திரியா ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.)

2. எல்லா அகதிகளுக்கும் ஆஸ்திரிய நிவாரண உதவி அளிக்கலாமா?

3. ஜெர்மன் சொத்துக்கள் என்று கருதப்பட்டு, நேசநாடுகளின் சொத்தாக இருக்கும் ஆஸ்திகளுக்கும் ஐ. நா. நாடுகளுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமா?

4. நாஜிகள் முன்பு ஆஸ்திரியாவுடன் கடன் விஷயமாக செய்துகொண்ட ஒப்பந்தங்கள் இப்பொழுது என்ன ஆவது?

ரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டால்தான், இந்நான்கு விஷயங்களில் உடன்பாடு தேட முடியும் என்று, [illegible] கூறுகிறார்.

இந்த விஷயமாக உடன்பாடு ஏற்படுவதை விரும்பவில்லை. இந்த உடன்படிக்கை கையெழுத்தானால் ஆஸ்திரியாவில் மட்டுமின்றி, ஹங்கேரி, ருமேனியாவிலிருந்துகூட ரஷ்யா தன் துருப்புகளை வாபஸ் பெறவேண்டும். இது ரஷ்யாவை டிட்டோவுக்கு எதிராக மிகவும் பலவீனப்படுத்திவிடும்.

நல்லோர் உழைப்பை...

—[3ம் பக்கத் தொடர்ச்சி]—

கள், மந்திரிசபை உயர்ந்தது'' என்று பேசினார். இல்லையா! முன்னால் சொன்னதையே தான் இப்போதும் சொல்லுகிறோம். நாங்கள் ஏன் சொல்லுகிறோம், எதற்காகச் சொல்லுகிறோம் என்று கவலைப்படுவதைவிட, எதற்காகச் சொன்னோமோ அதனால் நாடு அடையப் போகும் பலன்தானே முக்கியம். பெரியாரும் நானும் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் எப்படி இருந்தாலும். இரண்டு பேருக்கும் மூன்றே குறிக்கோள்கள்தாம். அரசியலில் தனிவட்டாரம், சமுதாயத்தில் சமத்துவம் சுயமரியாதை, பொருளாதாரத்தில் பொது உடைமை. திராவிடர் கழகம் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தால் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சமயம் நேரடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடும். அத்தகைய போராட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்குமுன்னால் பேசிய தோழர்கள் காங்கிரஸ் சர்க்கார் பேச்சுரிமையைத் தடை செய்வதைக் குறிப்பிட்டார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் காங்கிரஸ் தோழர்கள் மேடையில் ஏறிப் பேசிய பொழுது 'ஏன் எங்களுக்கு சி. ஐ. டி'' என்று கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்கள் ஆட்சியிலேதான், இன்று அண்ணாத்துரையை சி. ஐ டிக்கள் பின்தொடருகிறார்கள்.

(தொடர்ச்சி நாளை வரும்)

"சங்கிலிச்சாமி"

புதியம்புத்தூர், டிச. [illegible]— இவ்வூர் டி. டி. டி. ஏ. உயர்தர ஆரம்பப்பள்ளியில் 3-12-49 அன்று, தோழர் மு. கருணாநிதி எழுதிய ''சங்கிலிச் சாமி'' என்ற கதையை நாடகமுறையில் மாணவர்கள் நடித்துச் சிறப்பித்தனர்.

இந்து ஏகாதிபத்தியத்தால் நாட்டுக்குத் தீமையே!

தீமையைப் போக்க பிரிவினையே ஏற்ற மருந்து

பண்டிதர் பேச்சு பற்றிய ஆய்வுரை

"நமது பண்பாடு பண்பாடு என்று பெருமை அடித்துக் கொள்கிறோம். ஆனால் நமது தினசரி வாழ்க்கையில் அந்தப் பண்பாடு இருக்குமிடந்தெரியவில்லை. நமது உள்ளத்திலும் இதயத்திலும் எத்தகைய கருத்துகள் காணப்படுகின்றன என்பதை அறியாமல் பண்பாட்டைப் பற்றிப் பேசுவதில் பயனென்ன?

'இந்து தேசம்' 'இந்து தர்மம்' என்ற கோஷங்களாலும் இந்தியாவுக்குத் தீமைதான் ஏற்படும். இக் கோஷங்களை நாம் ஏற்பதென்றால் "இரு தேச கொள்கை"யையும் ஏற்றதாக ஏற்படும்."

இந் நாட்டில் இந்துக்கள் பெரும்பான்மையினராய் இருப்பதால், அவர்களது கலாச்சாரத்தைப் பிற மதத்தினர் ஏற்கவேண்டும் என நிர்பந்திக்க முடியாது. அவ்விதம் நிர்பந்திப்பது கொடிய அநீதியாகும்.

இவை, பருக்காளத் கழகத்தினர், இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கட்கு வரவேற்பளித்த போது பண்டிதர் பேசிய பேச்சுகளில் காணப்படும் கருத்துகள்.

பண்பாடுகளின் சிறப்புப்பற்றி குறிப்பிடுகையில் பழம்பெருமை பேசுவதால் பயனில்லை. அந்த பண்பாடுகள் இன்று இருக்கும் இடம் தெரியவில்லை. இன்று நம் இதயத்திலிருக்கும் கருத்துகளை எவை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்கிறார். அதாவது பண்பாடு என்பதெல்லாம் பேச்சோடு சரி என்று திட்டமாகக் கூறுகிறார். இது காங்கிரஸ் காரர்களுக்கு சரியான சூடு. இன்றையதினம் காங்கிரஸ் காரர்கள் பேசும் காந்தியமும் இதே நிலையில்தான் இருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன் ராமன், கிருஷ்ணன் என்று சொல்லி மக்களை ஏய்த்து வந்தார்கள். இன்று காந்தியாரின் பெயரைச் சொல்லி ஏய்க்கிறார்கள். இதுதான் அவர்களுடைய பண்பாடாக இருக்கிறதே தவிர பண்டிதர் சொல்வது போல, அவர்கள் பயனுள்ள பணி எதும் செய்வதாகத்தெரியவில்லை.

அதேசமயம் நாட்டுப் பிரிவினைபற்றி அவர் தந்திருக்கும் கருத்து நாமது கவனிக்கத் தகுந்தது. அவர் சொல்லுகிறார் 'இந்து தேசம்' 'இந்து தர்மம்' என்ற கோஷங்களால் நாட்டுக்குத் தீமைதான் விளையும் என்று.

தீமைதான் விளையும்! ஆம், இது முற்றிலும் உண்மையே. தீமை இனி புதிதாக விளைய போவதல்ல. அது பலகாலமாக விளைந்து, இன்று அறுவடைக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது. தேசியம்தான் இப் பயிரைத் தண்ணீர்விட்டு வளர்த்தது. முன்னாளில் வர்ணாசிரம தர்மம் நாட்டைக் கெடுத்தது. பின்னாளில் தேசியம் அந்தப் பணியைச் செய்தது. தேசியத்தின் போரால் தென்னாட்டை வடநாடு சுரண்டவும், அடிமை கொள்ளவும் ஆரம்பித்தது. இந்த ஆதிக்க வேட்டைக்கு கருவியாகப் பயன் படுத்தப்பட்ட, பயன்படுத்தப்பட்டுவரும் கோஷங்கள் பண்டிதர் சொல்லுவது போல் 'இந்து தேசம்' 'இந்து தர்மம்' என்பவைகளே ஆகும். இவ்விரு கோஷங்களைத் தான் டால்மியா ஓலிபரப்பி அடுத்தடுத்துக்கிளம்பி வருகின்றனர் காங்கிரஸ் தோழர்கள்.

காங்கிரஸ் தோழர்களின் இத்தகைய கோஷங்களுக்கு பட்டேல் போன்ற தலைவர்கள் ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகின்றனர். எனவேதான் திராவிடர்களின் உள்ளத்தில் பீதி உண்டாக ஆரம்பித்தது. இந்த மத ஏகாதிபத்தியம் இத் திராவிடத்தை அடிமைகொள்ளப் பார்க்கிறது என்பதை இப்பொழுது உணர ஆரம்பித்துவிட்டார்கள். அந்த உணர்ச்சிதான் நாட்டுப் பிரிவினை கோரிக்கையாகப் பரிணமித்திருக்கிறது.

'இந்து தேசம்' 'இந்துதர்மம்' என்றெல்லாம் பேசுவது தவறு என்று இன்றுதான் பேசுகிறார் பண்டிதர். இதற்கு முன் பண்டிதரோ வேறு யாரோ இம்மாதிரிப் பேசியதில்லை. 'இந்து தேசம்', 'இந்து தர்மம்' என்ற சொற்களுக்குப் பதிலாக சமத்துவம், தன்மானம் அனைவருக்கும் அரசியல், பொருளாதார, சமூக விடுதலை, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை" "உண்டுகளித்திருப் போருக்கு நிந்தனை" என்ற இலட்சிய ஒலிகள் எழுப்பப்பட்டிருக்குமானால், நாடு இந்த நிலைமைக்கு வந்திராது. இந்திய உபகண்டத்தில் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆனால் 'இந்து தேசம்' 'இந்து தர்மம்' என்ற கோஷங்கள் இத்தகைய நல்ல சூழ்நிலையில் கலக்கப்பட்ட நஞ்சாக விட்டது இன்று. இந்த கோஷங்களால், நாடு பிரியவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. தவிர்க்க முடியாத அளவுக்கு இப்பிரிவினைப் பிரச்னை வளர்ந்தும் விட்டது. எனவே, பண்டிதர் கருத்துப்படி ஆட்சியாளர் 'இருதேச' கொள்கையை ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமையை அவர்களே உண்டுபண்ணி விட்டனர். பிரிவினைப் பிரச்னை நன்றாக வேரூன்றிப் பழுத்துவிட்டது. இனி அதனை அழிக்க முடியாது.

"இந்நாட்டின் இந்துக்கள் பெரும்பான்மையோராய் இருப்பதால் பிறரும் இந்துக்களின் கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவது அநீதி" என்கிறார் நேரு. இந்த அநீதியை பண்டிதர் இன்றுதான் உணர்கிறார் போலும். ஆரிய கலாச்சாரம் வேறு, திராவிட கலாச்சாரம் வேறு என்பதை நாம் பலகாலமாக வற்புறுத்தி வருகிறோம். அப்படியிருந்தும் ஆட்சியாளர் இந்தி மொழியை கட்டாயமாகப் புகுத்துவதுதான் மூலம் திராவிடத்தில் ஆரியம் ஆதிக்கம் செலுத்தும்படி செய்கிறார்களென்றால், இது, எதைக் காட்டுகிறது? இந்துகள் பெரும்பான்மையோர் எனவே, பெரும்பான்மையோர் மனது வைத்தால் எதையும் செய்யலாம் என்பதை நன்றே காட்டுகிறது.

'இந் நிலையில் பிறர்மீது இந்து கலாச்சாரத்தை வலிய புகுத்துவது அநீதி' என்று பண்டிதர் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? ஆகவே, இனி செயற்படுவது பிரிவினை ஒன்று தான். பிரிவினைதான் இனி இவ் உபகண்டத்தின் நல்வாழ்வுக்கு ஏற்ற மருந்து.

எகிப்து பொதுத்தேர்தல்

கெய்ரோ, டிச. 10—

எகிப்திய பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. இத்தேர்தலில் வபதகட்சி 287 அபேட்சகர்களையும் லாடிஸ்டுகள் 183 அபேட்சகர்களையும் லிபரல்கள் 150 பேர்களையும் கோட்லை 83 பேர்களையும் நிறுத்திவைத்திருக்கின்றன.

இப்பொழுது மிகவும் பலமான கட்சி வபதகட்சியாகவே இருக்கிறது. இத தேர்தலில் சமோசசை வாதிகள், எல்லாரும் அப்துல் ஹமீதுபாஷாவின் தலைமையில் ஒன்று சேர்ந்திருக்கின்றனர்.

சோவியத் ராஜதந்திரிகள்மாநாடு

அம்மான், டிச. 10—

மத்திய கிழக்கிலுள்ள ராஜதந்திரிகள் கூட்டம் இஸ்தான்புல்லில் நடக்கவிருந்தது. துருக்கி ஆட்சேபித்ததால் அம்மாநாடு டெல் அவீவில் நடைபெறலாம் என்று ஹெப்ரு பத்திரிகைகள் கூறுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம்

15—12—49

தர்மபுரி :— சி. என். அண்ணாத்துரை, ஏ. சித தையன், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஜி. பி. சோமசுந்தரம்

போகிற போக்கில்...!

"நாடு முன்னேற்ற மடைந்தால்தான் அனைவருக்கும் சுபீட்சம் ஏற்படும்"

—நேரு

அப்படியா! இந்த உண்மை தெரியாமல்லலவா தடுமாறிக் கொண்டிருந்தோம், நாம்!

* * *

"விலாசம் தெளிவாக டைப் செய்யப் பட்டிருந்தும், ஒரு தபால்கார்டு 12 வருஷம் ஆறு மாதம் பிரயாணம் செய்துள்ளது. திருச்சி மேட்டுப் பாளையத்தில் 12—6—37 ல் போடப்பட்டு, 6—6—49 ல் ராசிபுரத்தில் டெலிவரி செய்யப் பட்டுள்ளது"

—செய்தி

கடிதம் எழுதியவர் கடிதத்தின் தலைப்பில் 'ஸ்ரீராம ஜெயம்' என்று போட மறந்திருப்பாரோ!

* * *

"இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு இருந்த பொறுப்பைவிட இந்தியப்பத்திரிகைகளுக்கு இப்போது அதிகப் பொறுப்புகள் வந்துற்றிருக்கின்றன. நமக்கென நாம் புதிய அரசியல் வகுத்துக் கொண்டுள்ளோம். மக்களை நல்ல வழியில் அழைத்துச் செல்ல அவர்களுக்கு அறிவுத் துறையில் ஆசானாக விளங்கி வரவேண்டும் பத்திரிகைகள்"

— சி. ஆர். சீனிவாசன்

மக்களுக்கு அறிவுரைப்பு கட்டுவதுதானுகஷ்டம்! நாள்தோறும் கோசர பலன் ஒரு பக்கம், 'பல்லி விழும் சாஸ்திரம், அரைப் பக்கம்; வியாசர் விருந்தும் வேதரகசியங்களும் சேர்ந்து ஒரு பக்கம், ரேஸிங் டிப்ஸும் மந்திரிகள் சுற்றுப் பயணமும் கலந்தாற்போல் ஒரு பக்கம் போட்டுபத்திரிகைகளை வெளிக்கிளப்பிவிட்டால், ஒரு சிலமாதங்களில்நம் பாரத புத்திரர்கள், அமெரிக்கர்களோடுமட்டுமா, ரஷ்யர்களோடே போட்டிபோடமாட்டார்களா! ஆக்க வேலையில் ஸ்தாபன ரீதியாய் இறங்குக அனைத்திந்திய பத்திரிகாசிரியர் மாநாட்டுத் தலைவர்!

* * *

"5 வருஷகாலம் காங்கிரஸில் சேரக்கூடாது என சிலருக்குத் தடை"

—செய்தித் தலைப்பு

ஐந்து வருஷ காலங்கழித்துத் திரும்பிவரும்போது காங்கிரஸ் இருக்குமோ, இராதோ என்று கவலைப்படுகிறார்களாம் அந்தச் சிலர்!

* * *

"உலக மக்கள் மனதை மலான் சர்க்கார் புண்படுத்தி விட்டது."

— ஸ்மட்ஸ்

எங்கு நோக்கினும் தென்னாப்பிரிக்காக்களும் பார்க்குமிடமெல்லாம் மலான்களும் காட்சியளிக்கும் இந்திய நாட்டைச் சேர்ந்த மக்கள் மனதைக் கூடவா!

* * *

"பர்மோஸா தீவுக்கு சியாங் ஓட்டம்"

—செய்தி

தலைவர் என்ற முறையில் உத்தியோகப் பூர்வமாகத் தானே!

சென்னை மாவட்ட தி. மு. கழக மாநாடு

வரவேற்புக் கழகக் கூட்டம்

சென்னை, டிச. 11—

நேற்று மாலை 5 மணிக்கு சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித்தெரு கழகக் கட்டிடத்தில் சென்னை மாவட்ட தி. மு. கழக மாநாட்டு வரவேற்புக் கழக கமிட்டிக் கூட்டம் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி செயலாளர் எடுத்துரைத்த பின் மாநாடு நடத்தப்பட வேண்டிய முறை குறித்தும், மாநாட்டுக் காரியங்களைக் கவனிக்க காரியமாற்றும் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவரைக் குறித்தும், தலைவர் தனது முன்னுரையில் எடுத்துக் கூறிய பிறகு கீழ்கண்டபடி தீர்மானங்கள் நிறைவேறின.

1. மாநாட்டுக்குத் தலைமை வகிக்கவும், மாநாட்டுக் கொடியேற்றுவிழா ஆற்றிவைக்கவும் சேலம்தோழர் ஏ.சித்தையன்அவர்களை அழைப்பதெனவும்.

2. மாநாட்டைத் துவக்கிவைக்க கோவில்பட்டி தோழர் இ. வி. ஏ. வள்ளிமுத்து அவர்களை அழைப்பதெனவும்.

3. மாநாட்டை வருகிற 15-1-50 ஞாயிறு அன்று சென்னையில் நடத்துவது எனவும்.

4. மாநாட்டும் பந்தலுக்கு அழகிரிபந்தல்எனபெயரிடுவதென்றும்.

5. மாநாட்டுப் பந்தல், மேடை, ஆகியவைகள் அமைப்பதற்கு தோழர் காஞ்சி. மணிமொழியார் அவர்களை இக்கமிட்டி நியமிக்கிறதெனவும்.

6. மின்சாரம் ஒலிபெருக்கி, விளக்குகள் ஆகியவை அமைக்க தோழர் வி. முனுசாமி அவர்களை இக்கமிட்டி நியமிக்கின்றதெனவும்.

7. பந்தல்,மேடைகளுக்குஅலங்கரிப்புக் காரியங்களைக் கவனித்துக்கொள்ள தோழர்கள் ஏ. கே. சாமி, ஆர். டி. அரசு ஆகியோரை இக்கமிட்டி நியமிக்கிறதெனவும்.

8. மாநாட்டின் விளம்பர அதிகாரியாக தோழர் சி. வி. ராசன் அவர்களை இக்கமிட்டி நியமிக்கின்றதெனவும்.

9. மாநாடன்று இரவு நடைபெறும் நாடகசாரியங்கள் முழுவதையும் கவனித்துக்கொள்ள தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களை இக்கமிட்டிநியமிக்கின்றதெனவும்.

10. மாநாட்டுத் தொண்டர் படைத்தலைவராக தோழர் ஏ. சேஷாசலம், அவர்களையும் பெண் தொண்டர் படைத் தலைவியாக தோழியர் அலமேலு அப்பாத்துரை அவர்களையும் இக்கமிட்டி நியமிக்கின்றதெனவும்.

11. மாநாட்டுக்கும் நாடகத்திற்குமாகச் சேர்த்து பிரதிநிதி டிக்கட் ரூபாய் 1—0—0, வரவேற்பு அங்கத்தினர் டிக்கட் ரூபாய் 2-0-0 ஆதரவாளர் டிக்கட் ரூபாய் 10-0-0 என்பதாகவும் மாநாட்டு டிக்கட் விற்பனை முதலிய பணத்தை மாவட்டக் கழக, செயலாளர் கே. கோவிந்தசாமி பொருளாளர் மு. இளையபெருமாள் பி. ஏ. ஆகிய இருவர் பெயரிலும் பாங்கியில் போட்டு வரவு செலவுகளைக் கவனித்துக் கொள்ள இக்கமிட்டி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கின்றதெனவும்தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

தலைவர்முடிவுரைக்குப்பின்நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது. மாநாட்டுவிளம்பரஅதிகாரி தோழர்சி.வி.ராஜன்தெரிவிக்கிறார்.

தி. மு. க. மதுரை மாவட்டக் கிளை

சோழவந்தான், டிச. 9—

4-12-49 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சோழவந்தான் தோழர் டி. ஆவுடையப்பன் அவர்கள் இல்லத்தில் மதுரை மாவட்டக் கிளை அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மத்திய தி. மு. கழகப் பிரச்சாரக் குழு செயலாளர், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் இயக்கத் தோழர்கள் சுமார் 100 பேர் வரை வந்திருந்தார்கள்.

மதுரை மாவட்டக் கிளைக்குக் கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

சோழவந்தான் தோழர் டி. ஆவுடையப்பன் (செயலாளர்)

மதுரை தோழர் எஸ். முத்து, திண்டுக்கல், தோழர் என் முத்து (துணைச் செயலாளர்கள்)

மதுரை தோழர் சி. மூத்திருளாண்டி (நிதி உதப்பினர்)

வாடிப்பட்டி தோழர் ஆர். ராஜகோபால் (விளம்பர உறுப்பினர்)

தோழர்கள் க. சேதுராமன், கு. வேலு, எம். அய்யாசாமி, கே. எஸ். ராஜமான் (மதுரை), இ. காத்தான், மா. ரத்தினம் (நிலக்கோட்டை) ப. ராமசாமி ஆர். எஸ். பெருமாள் (வத்தலக்குண்டு), இ. ஜெயப்பிரகாசன், எஸ். மீனாட்சிசுந்தரம், (கட்டி வீரன்பட்டி), பி. வெங்கடசாமி (வாடிப்பட்டி), ச. பழனியாண்டவர் என். இராமப்பா (சோழவந்தான்), என். பி. பழனிச்சாமி, வ. ராமலிங்கம் (கொண்டயம்பட்டி), பெ. சுப்பிரமணியம், வே. சுப்பிரமணியம் (மேலச்சின்னம்பட்டி) சின்னக்கணபதி, மாரிமுத்து (முகவூர்), பி. ராஜா, எம். பரமசிவம் (திண்டுக்கல்), எ. சேட் அஜ்மல்கான், சி. இருளப்பன் (அய்யம்பாளையம்), இ. செல்லையா, அ. மாரிமுத்து (தேனி), அ. சுப்பையா, வே. முத்தையா, (அழகிச்சிபட்டி), சூரியநாராயணன் (நிலக்கோட்டை) அழகர்சாமி (வாடிப்பட்டி), ப. சுந்தரம் (மதுரை) எஸ். பி. ஆர். மலைச்சாமி (கொண்டயம்பட்டி) ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத சிற்றூர்க் கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் இரண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து மாவட்டக் கழகச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டன.

தீர்மானங்கள்

(1) நம் இயக்கத்திற்குத் தீவிரத் தொண்டாற்றிய பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி, விருதை வெ. கி. சிவராம் ஆகியவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

(2) பர்மா, மலேயாவிலிருந்து விரட்டப்பட்டு ஓட்டாண்டிகளாய் அகதிகளாகி நாட்டு வேலை மான முறையில் சென்னை வந்து சேரும் திராவிட மக்களுக்கு, வாழ வழி செய்யாத சென்னை அரசாங்கம், வடநாட்டு அகதிகளை வரவேற்று, தங்க இடமும் உண்ண உணவும், வேலையும் கொடுத்து ஆதரிப்பதன் மூலம் இம்மாகாணத்தின் வரிப்பணத்தைக் கரியாக்குவதை இக்கூட்டம் வன்மையாய்க் கண்டிக்கிறது.

(3) சென்னை சர்க்கார் முறையில்லாத கட்டாயக் கடனை மிதமிஞ்சிய வருமானம் உடையவர்களிடமிருந்து வசூலிக்க முயற்சிக்காமல், ஏழை விவசாயிகளை ஏய்க்கும் முறையில் இரட்டிப்பு நிலவரியாக வசூலிக்க முன்வந்திருப்பதை இக்கூட்டம் வன்மையாய்க் கண்டிக்கிறது.

(4) மதுரை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டை வருகிற பிப்ரவரி முதல் வாரத்தில் சோழவந்தானில் நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(5) ஜனவரி மாதத்தில் மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டுமாய் மத்திய தி. மு. கழகப் பொதுச் செயலாளரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

பின்னர் தோழர் கே. எ. மதிமுகன் அவர்கள் பேசியபின் தலைவர் முடிவுரை கூறக் கூட்டம் முடிவுற்றது.

கூட்டத்திற்கு வந்திருந்த வெளியூர் பிரதிநிதிகளுக்குத் தோழர் டி. ஆவுடையப்பன் அவர்கள் இல்லத்தில் பகல் உணவு அளிக்கப்பட்டது.

(கி. உ.)

அனுதாபம்

மதுரை, டிச. 8—

சுயமரியாதை இயக்க ஆரம்ப கால முதல் இயக்கப்பணியாற்றி வந்தவரும், மதுரையில் தன் மதிப்பியக்கம் பரவத் தளராது உழைத்தவரும், தீவிர கொள்கைப் பற்றும், செயலாற்றும் திறனும் படைத்தவரும், தற்போதைய தி. மு. கழக ஊழியர்களில் ஒருவருமாகிய ஆசிரியர் தோழர் எம். பட்டினத்தார் அவர்கள் தமது நாற்பதாவது வயதில், எதிர்பாராதவிதமாய்த் திடீரென 4-12-49 ல் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரடைந்தோம். அன்னாருக்கு மனைவியும், மணமான ஒரு புதல்வியும், மணமாகாத இரு புதல்விகளும் இருக்கின்றனர். ஆசிரியர் பட்டினம் அவர்களைப் பிரிந்து துயரக்கடலில் மூழ்கியிருக்கும் அன்னாரது துணைவியாருக்கும், புத்திரிகளுக்கும், அன்னாரது மருமகன் தங்கையா அவர்களுக்கும் துரை தி. மு. கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வோம் என தி. மு. கழகம் மதுரைக் கிளையின் செயலாளர் எம். அய்யாசாமி எழுதுகிறார்.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"மாலை மணி" சென்னை

திருமணங்கள்

பெரம்பலூர், டிச. 7—

இவ்வூர் தோழர் எ. எஸ். சாமுவேல் அவர்களுக்கும், தோழியர் மேரிஜயம் அம்மைக்கும் 1-12-49 அன்று சீர்திருத்த முறைப்படி திருமணம் நடைபெற்றது (இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம்) நன்றி! [ஆ-ர்]

* * *

கோட்டைக்கார புதூர், டிச. 7—

இவ்வூர் தி. மு. க. தோழர் சுப்பிரமணியத்திற்கும், தோழியர் சுப்புலட்சுமிக்கும் 1-12-49-ல் சீர்திருத்த முறைப்படி திருமணம் நடந்தேறியது. இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் மணமக்களுக்கு வாழ்த்திதழ் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. (இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் நன்றி! ஆ-ர்]

மறுமணம்

அருப்புக்கோட்டை, டிசம்பர் 3—

1-12-49 மாலை அன்று 7-மணிக்கு திருநகரம் அழகாபுரித் தெருவில் தோழர் கே. இராமசாமி அவர்கள் இல்லத்தின் முன்பாக தோழர் ச. அ. கணபதி அவர்கள் தலைமையில் ஆ. சித்திரதன்—அமைச்சியார் அம்மன் (ஸ்ரீவில்லிபுத்தூர்) அவர்களின் மறுமணம் சிறப்பாக நடந்தது. தோழர் முதலில் கே. இராமசாமி வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்தி வைத்தார். தலைமை வகித்தவர் வாழ்த்துரைப்பின் மணமக்களைத் தம்பதிகட்கு தோழர் அர். எஸ். மணி ஓர் வாழ்த்து இதழ் படித்து வழங்கினதும், திருநகரம் சாலியர் பிரசாரப் பயிற்சிக் கழகத்தார் வாழ்த்துக்கூறி மலர்மாலை அணிவித்தனர். பின்பு முறையே ஈ. முத்துக்காளை, எஸ். சண்முகப் பெருமாள், கே. இராமசாமி, ச. அ. க. சிவமணியம் ஆகியோர் விரிவுரையாற்றினார்கள். தலைவர் முன்னுரைக்குப்பின் நன்றி கூறி விடைபெற்று இரவு 9-மணிக்கு விழா இனிது முடிந்தது.

பிறப்பு

அருப்புக்கோட்டை, டிச. 2—

தோழர் செ. இராமசாமி அவர்களின் துணைவியார் தோழியர் சுகசரஸ்வதி அம்மைக்கு 25-11-49 அன்று ஓர் ஆண்மகவு பிறந்தது. அம்மகவுக்கு "கலைச்செல்வன்" எனப் பெயர் சூட்டப்பட்டது. [இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். நன்றி! ஆ-ர்]

* * *

சேலம் செவ்வாய்ப்பேட்டை டிச. 8—

இவ்வூர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களின் துணைவியார் தோழியர் சாரதாவிற்கு 29—11—49-ல் ஓர் ஆண்குழந்தை பிறந்தது [இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் நன்றி!

* * *

திண்டிவனம், நவ. 30—

இவ்வூர் தி. மு. க. தோழர் இரங்கநாதன் அவர்களின் துணைவியார் தோழியர் வள்ளியம்மைக்கு 10—11—49-ல் ஓர் பெண் மகவு பிறந்தது. [இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் நன்றி! ஆ-ர்]

கோவை மாவட்ட தி. மு. க. கமிட்டிக் கூட்டம்

கோவை மாவட்ட தி. மு. க. கமிட்டிக் கூட்டம் 18-12-49 ஞாயிறு காலை 10-மணிக்குக் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது மாவட்ட மாநாடு ஈரோட்டில் நடத்துவது பற்றியும், வரவேற்புக் குழு அமைப்பது பற்றியும், மாநாடு நடைபெறுவதற்கான நாள் குறிப்பது பற்றியும் ஆலோசிக்கப்படும். ஆகவே இதையே அழைப்பாகக் கொண்டு மாவட்ட கழக உறுப்பினர்கள் தவறாது வந்துசேருமாறு செயலாளர் தோழர் பெத்தாம்பாளையம் பழனிசாமி அவர்கள் அழைக்கிறார்கள்.

நேர்மையான கொள்முதல் செய்ய ஏற்பாடு

சென்னை, டிச. 20—

நேர்மையான முறையில் தானியக்கொள்முதல் செய்ய ஓர் ஏற்பாட்டை ஸ்ரீபெரும்புதூர், காஞ்சீபுரம் தாலுக்காவின் பின்பற்றும்படி கிராம அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக ஜில்லா சப்ளை டைரெக்டர் தோழர் என். எஸ். அருணாசலம் ஐ.ஏ.எஸ். தெரிவிக்கிறார்.

இம்முறைப்படி ஐந்து வெட்டிற்கும் மேற்பட்டுள்ள தானியங்களை அறுவடை செய்து போரடித்ததும் எவ்வளவு தானியம் காணுகிறது என்று கண்டுபிடித்து இதிலிருந்து ஒரு ஏகருக்கு எவ்வளவு கிடைக்கும் என்பதைக் கணக்கிடும்படி செய்யப்பட்டிருக்கிறது. இதில் 10 சதவீதத்துக்கு மேல் போகாமல் தானியக்கொள்முதல் அளவு நிர்ணயிக்கப்படவேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்று அருணாசலம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது—

இத்தாலுக்காவில் சோளம் கேழ்வரகு, சிவப்பு அரிசி முதலிய தானிய வகைகள் மிகவும் திருப்திகரமான நிலைமையில் விளைந்திருக்கின்றன.

ஸ்ரீபெரும்புதூரில் இருக்கும் குளங்களில் போதிய தண்ணீர் இல்லை எனினும் இவ்வருஷம் பருவமழை காரணமாக மழை அதிகம் இல்லாததனால்.

இங்கு 1,000 ஏக்கர் நிலங்களில் இரண்டாவது பயிரிடுவதற்கு இருக்கும் விவசாயிகள் திட்டம் போட்டுள்ளனர். நஞ்சை புஞ்சை வயல்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்ய அனுப்புவதற்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

பீடித் தொழிலாளர் சங்கம்

ஈரோடு, டிச. 8—

ஈரோடு பீடித் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 4—12—49-ல் டவுன்ஹாலில் பொதுக்கூட்டம் எம். ஏ. ஈஸ்வரன் எம். எல். ஏ. தலைமையில் நடந்தது.

தீர்மானங்கள்

1) ஈரோடு டைமன் பீடி கம்பெனி தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேணுமாய் தொழில் கோர்ட்டால் தீர்ப்பளிக்கப்பட்டு 9 மாதமாயும் டைமன் கம்பெனி முதலாளி அமுல் நடத்தாமல் இருப்பதை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன், இது பற்றி சென்னை சர்க்கார் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி இக்கூட்டம் வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறது.

(2) ஈரோட்டில் உள்ள பீடி முதலாளிகள் இங்குள்ள தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு 6 நாள் வேலை கொடுக்கும்படியாய் இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதுடன், வேலை இல்லாத நாட்களுக்கு ½ நாள் சம்பளம் கொடுக்கவேணுமாய் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

(3) டைமன் பீடி கம்பெனி தொழிலாளர்கள் காரணமின்றி வேலையின் விஷயமாய் நீக்கப்பட்ட தொழிலாளர்கள் 5 பேருக்கு சட்டப்படி வாக்கு கொடுக்கும்படி சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

(4) தற்சமயம் டைமன் பீடி கம்பெனியில் வேலை செய்யும் நிரந்தர தொழிலாளிகளுக்கு வாரத்தில் 6 நாள் வேலை கொடுக்குமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வானொலி

(13-12-49 செவ்வாய்க்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 டி. ஆர். சிதம்பரநாதன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-30 டி. எஸ். ஞானம்பாள்—பாட்டு

பிற்பகல்:

12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 குரல்வகை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 வேணுகோபால்— வயலின்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 வி. எம். கிருஷ்ணமூர்த்தி—பாட்டு

இரவு:

7-00 வி. கோவிந்தன்—பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 குரல்வகை (இசைத்தட்டு)
7-45 கே. சாவித்திரியம்மாள்—கோட்டு வாத்யம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஜம்பமணி: நாடகம்
9-30 எச். கோபாலதாஸ்—பாட்டு
10-00 வாத்ய இசை (இசைத்தட்டு)
10-30 முடிவு.

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எஸ். பி. கல்யாணசுந்தரம்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 வயலின் இசைத்தட்டு
8-30 ஆர். ராஜம், ஆர். சரஸ்வதி—பாட்டு

பிற்பகல்:

12-00 நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 ஆர். ராஜம், ஆர். சரஸ்வதி—பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 சுப்ரமணிய அய்யர்—வீணை—இசைத்தட்டு
2-45 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 எம். என். நடராஜபிள்ளை—புல்லாங்குழல்
5-40 இசைப்பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 எஸ். பி. கல்யாணசுந்தரம்—பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 இலக்கிய வாசகம்
7-45 கே. சாவித்திரி அம்மாள்—கோட்டு வாத்யம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 எம். என். நடராஜபிள்ளை—புல்லாங்குழல்
9-35 நீங்கள் கேட்டவை (இ. த.)
10-0 முடிவு.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. முனியப்பமுதலியார், மதுரை

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.